Registered as a news paper.

பக்கங்கள்: 04+60+iv = அறுபத்தெட்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாட வேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop, 259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். T.P: 021 222 7835 Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ.ச. முன்பாக, 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் T.P: 021 222 7560 Fax:021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 15 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 15 (01.10.2004) வெள்ளிக்கிழமை இதழ்: 01

# உடன் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும்!

## கூட்டமைப்பு எம்.பிக்களின் குழு அமெரிக்க தூதரிடம் கோரிக்கை

(கொழும்பு)

**தேக்கமடைந்திருக்கும் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்குமாறு அரசாங்கத்துக்கும் மற்றும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட்டை நேற்றுச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியபோதே அந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.**

சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திட்டத்துக்கு அமைவாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையிலான கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது தேக்கமடைந்துள்ள சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கவேண்டியதன் அவசியம் குறித்து அமெரிக்கத் தூதுவருக்கு எடுத்துக் கூறியுள்ள தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அமெரிக்க அரசாங்கம்

(04, ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியற் குழுவுக்கு ஜெனீவாவில் பெரும் வரவேற்பு!



(ஜெனீவா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவினர் நேற்று முன்தினம் இரவு ஜெனீவா விமான நிலையத்தைச் சென்றடைந்தபோது - அங்கு அவர்களுக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் ஜெனீவா விமான நிலையத்தை அடைந்த புலிகள் குழுவை, விமான நிலையத்தில் திரண்டிருந்த புலம்பெயர் வாழ் சுவிஸ் தமிழீழ மக்கள் கைகளில் தமிழீழ தேசியக் கொடிகளையும், மலர்ச்செண்டுகளையும் தாங்கியவாறு பெருமகிழ்வுடனும், எழுச்சியுடனும் வரவேற்றனர்.

நேற்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் சில சந்திப்புக்களை நடத்தியதுடன் இன்று முக்கிய கூட் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலோசனைக் குழுக்களின் பெயரில் பேச்சுக்களை தாமதப்படுத்த ஜனாதிபதி முற்படுகிறார்!

### ஐ. தே. க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசிய ஆலோசனைச்சபை என்பன போன்ற குழுக்களை அமைதது சமாதானப் பேச்சுக்களைத் தாமதப்படுத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா முற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே ஜனாதிபதி சந்திரிகா மீது இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் விடுதலைப் புலிகளின் உள்ளக சுயாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை (04 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் நடத்தப்பட்ட ஹர்த்தால் அரசியல்வாதி ஒருவரின் சதிவேலை!

### மட்டு.அம்பாறை அரசியற்துறை அறிக்கை

அம்பாறை மாவட்டம் - அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை போன்ற முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வட்டமடு பிரதேசத்தில் முஸ்லிம் விவசாயிகள் தமது காணிகளில் விவசாயம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, இந்த ஹர்த்தாலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்றுப் பிரதேசங்களில் இந்தக் ஹர்த்தால் காரணமாக பாடசாலைகள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்கள் எதுவும் இயங்கவில்லை.

போக்குவரத்துச் சேவைகளும் தடைப்பட்டிருந்தன. அந்தப் பிரதேசங்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தன.

இதேவேளை, நேற்றைய ஹர்த்தாலுக் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வீடுகளுக்கு வாடகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது

### யாழ்.படைத் தளபதி சுனில் தென்னக்கோன்

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் இருக்கின்ற பொதுமக்களின் வீடுகளுக்கு வாடகை வழங்குவதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாக யாழ்.குடாநாட்டுக்கான இராணுவத் தளபதி மேஜர்ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட சமாதானத்திற்கும், நல்லெண்ணத்துக்குமான குழுவை யாழ்மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் நேற்றுக்காலை யாழ்.ஆயர்இல்லத்தில்10 மணியளவில் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது சமாதானத்திற்கு நல்லெண்ணத்துக்கு ...ான குழுவின் சார்பாக யாழ்.ஆயர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர் ஐயன்கேணியில் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் நேற்றுமுன்தினம் இரவு அழைத்துச்செல்லப்பட்ட 19 வயது இளைஞரொருவர் நேற்றுக்காலை துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

தர்மலிங்கம் கோபாலகிருஷ்னன் என அடையாளம் காணப்பட்டுள்ள இந்த இளைஞரை, நேற்றுமுன்தினம் இரவு 9.00 மணியளவில் இவரது வீட்டிற்கு சென்ற நான்கு ஆயுதபாணிகள் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு அவரது வீட்டைக் காட்டுமாறு அழைத்துச் சென்றனர். (04 ஆம் பக்கம் பார்க்க)




எரிமலை நெருப்பின் வீச்சாய்
ஈராண்டு தமிழ் முத்தில்
உரிமையின் குரல் முழக்கி
ஊர் காத்த ஈழ நாடே!
அரிய செந் தமிழர் மூச்சாய்
அதிர்வுறப் பொங்கி ஆர்க்கும்
பெரிய வான் புயலே! இன்றும்
பேசு நீ பேசு! பேசு!

போதியின் நிழலில் நின்றே
பொழுதெலாம் கைக்கொல் வாரை
ஏதிலி கூட்டமாய் நாம்
இடர்... வாட்டுவாரை
ஆதி... தொட்டே நம்மை
ஆ...வார் ஒடுக்குவாரை
மோதிவா ஈழநாடே!
மோது நீ மோது! மோது!

எந்தமிழ் ஈழநாடே!
எண்டிசை உலகும் காண
இந்தநாள் அமைதி நாளாய்
இருந்தும் பார்...! எமது நெஞ்சில்
பொந்துகள் செய்தார் மாற்றார்!
போர் செய்தார் மாற்றார்!
போர் செய்தார்! சாவு செய்தார்!
செந்தழல் எரிய நின்று
சீறு நீ சீறு! சீறு!

பீடுகொள் தமிழ்மா வேங்கை
பிரபாகரன் கண் முன் நம்
நாடு கை விலங் கறுக்கும்!
நடு வானில் புலி பறக்கும்!
நீடு நம் புகழ் நிலைக்கும்!
நிலைக்கும்! என் ஈழ நாடே!
சாடு நீ பகைப் புலத்தைச்
சாடு நீ சாடு! சாடு!

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்

**இன்றைய நாளிதழுடன் 64 பக்க சிறப்பிதழ் இணைக்கப்பட்டுள்ளது. எனவே தவறாமல் கேட்டு வாங்குங்கள்.**

இலங்கையின் முன்னணி வதிக்கும் உள்ளூர் விமான சேவை...
...க்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR Your friend in the skies...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு, உள்நாட்டு உணவு வகைகள், குளிர்பானங்கள்,
சிற்றுண்டிகள் என்பவற்றை ஒரே இடத்தில் தரமாகவும்,
மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் வைபவங்களுக்கான உணவு வகைகளை
அவ்விடத்திலேயே சென்று பரிமாற்றச் சேவையைப் பெற்றுக்
கொள்ளவும், நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

# கிளியரசன் சுவையகம்

யாழ்சாலை, கிளிநொச்சி.

(C/2846)

---

aat tamil.com
Dr. Subramaniam Road,
Chunnakam.

# Computer Classes

☆ Ms Office
☆ Desk Top Publishing (DTP)
☆ Hard Ware
☆ Internet & E-Mail

**Batch II**
**Commence On - 10.10.2004**

சுன்னாகத்தில் முதன்முறையாக
Net 2 Phone
நிமிடத்துக்கு 9/= மட்டுமே

சகல கணினி அச்சு வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

T.P: 021 - 4591400
021 - 4591448
021 - 4594451

(C/3210)

Director
aat

---

நமது ஈழநாடு மூன்றாவது வருடத்தில் தனது பக்கசார்பற்ற
பாதையில் நடைபோட எமது வாழ்த்துக்கள்

* வசந்தா வெதுப்பகம்
* வசந்தா மருந்தகம்
* வசந்தா களஞ்சியம்
* வசந்தா தொலைத் தொடர்பகம்



T.P. 060 2213185
021 4590665

59 பிரதான வீதி,
ஊர்காவற்துறை.

(C/3206)

---

தனது இரண்டாவது அகவையை நிறைவுசெய்யும் நமது ஈழநாடு நாளிதழுக்கு
எமது இனிய வாழ்த்துக்கள்

# பிள்ளையார் சைவ உணவகம்

உரிமையாளர்,
திருஞானசம்பந்தர் ரகுநாதன்.

(C/3207)

சுரம்பன் கிழக்கு. ஊர்காவற்துறை.
வைத்தியசாலை முன்பாக.

---

தனது சேவையின் மூன்றாம் ஆண்டில் கால் பதிக்கும்
நமது ஈழநாடு
"உண்மையை எழுதி, நல்லதைப் பெருக்கி" என்ற வாக்கியத்திற்கு அமைய என்றும் எங்கள்
உள்ளங்களில் நிறைந்து நீடூழி வாழ வாழ்த்துகின்றோம். வாழ்க வளமுடன்...

# மகா மாரி குளிரகம்

இல:- 09 வங்களாவடி, வேலணை.

(C/3208)

---

இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துச் சிறந்த
கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும், இழந்த
பற்களைக் கட்டிக் கொள்ளவும், பொருத்திக் கொள்ளவும்,
உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளவும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# ஸ்ரீக்கணேஷ்

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-222 2486

இல.91, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

இல.80,
கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோரிக்கைகளை நிறைவேற்றாவிடின்

# உலக ஆசிரியர் தினத்தை துக்கதினமாக அனுஷ்டிப்போம்

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் கோரிக்கைக்குத் தகுந்த தீர்வு கிடைக காத பட்சத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக ஆசிரியர் தினத்தை துக்கதினமாகக் கடைப்பிடிக்கப்போவதாக, வடக்கு-கிழக்கு பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது -

எம்முடைய நிரந்தர நியமனம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அங்கீகரிக்காவிடின் எமது போராட்டத்தை நாம் விஸ்தரிக்கவுள்ளோம். வடக்கு - கிழக்கில் 3000 ஆயிரம் ஆங்கில ஆசிரியர்களுக்கு வெற்றிடம் காணப்படுகின்றபோதும், 743 பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களே உள்ளனர்.

இதனைவிட க.பொ.த (உ/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் 'டி' அல்லது 'சி' பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கு ஆங்கில ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்தத் தகைமையையும் நாம் கொண்டுள்ளோம்.

எமது நியமனம் தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்படாவிட்டால், எதிர்வரும் ஆசிரியர் தினத்தன்று எம்மால் கடைப்பிடிக்கப்படவுள்ள துக்கதினத்திற்கு வடக்கு - கிழக்கிலுள்ள மாணவர் மற்றும் ஆசிரியர்கள் அனைவரையும் எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நேற்றைய தினம் தமது மறியற் போராட்டத்தை யாழ்.வலயக் கல்வி அலுவலகம் முன்பாக நடத்தினர்.

நேற்றைய இவர்களது மறியற் போராட்டத்தின் இறுதியில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னராஜா மற்றும் யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் ஆர்வலன் ஆகியோரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களைக் கையளித்தனர்.

## விளையாட்டு விழாவும் ஒளிப்பேழை வெளியீடும்

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழக சிறுவர் இல்லங்களுக்கான புனரமைப்புக்கும், அபிவிருத்திக்குமான நிறுவகம் தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் நடத்தும் விளையாட்டு விழாவும், தமிழர் புனர்வாழ்வுக்கழக சிறப்பு வெளியீடான 'உதிக்கும் திசையில் சிரிக்கும் மலர்கள்' ஒளிப்பேழை வெளியீட்டு விழாவும் இன்று கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த விளையாட்டு விழாவில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் பராமரிக்கப்பட்டுவரும் சிறார்களும் ஏனைய சிறுவர் இல்லங்களால் பராமரிக்கப்பட்டுவரும் சிறுவர்களும் பங்குகொள்ளவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து வேலணையூர் சுரேசின் எழுத்துருவாக்கத்தில் உருவான வலுவிழந்த சிறார்களது உள்ளத்து உணர்வினைச் சுமந்து வரும் 'உதிக்கும் திசையில் சிரிக்கும் மலாகள்' என்னும் ஒளிப்பேழை வெளியிடப்படவுள்ளது.

## தென்மராட்சி வலயத்துக்கான உதைபந்தாட்ட இறுதிப்போட்டிகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கொடிகாமம் அ.த.க.பாடசாலையின் இராசா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியின்போது 16 வயதுப் பிரிவின்கீழ் நாவற்குழி மகா வித்தியாலயத்தை எதிர்த்து வீரசிங்கம் மகா வித்தியாலயமும், 14 வயதுப் பிரிவின்கீழ் டிறிபேக் கல்லூரியை எதிர்த்து வரணி மகா வித்தியாலயமும்,

12 வயதுப் பிரிவின் கீழ் சாவகச்சேரி இந்துக்கல்லூரியை எதிர்த்து வீரசிங்கம் மகா வித்தியாலயமும், 18 வயதுப் பிரிவின் கீழ் டிறிபேக் கல்லூரியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக்கல்லூரியும் மோதுகின்றன.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மு.க.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டி நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (31.29)

# சின்னஞ்சிறு செய்திகள்

### முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை காலை 9.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

அன்றையதினம் அவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். அனைத்து உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பீடாதிபதி கேட்டுள்ளார்.

### மாதாந்த இசை நிகழ்வு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இடம் பெற்று வரும் மாதாந்த இசை நிகழ்ச்சியின் இன்றைய நிகழ்வில் செல்வி குமுதா சோமசுந்தரக் குருக்களின் வீணை இசை இடம்பெறவுள்ளது.

ஆறுதிருமுருகன் தலைமையில் இன்று மாலை 5.00 மணியளவில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

### கலந்துரையாடல்

அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் தொழிற்சங்கத்தினால் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் வருமான மேற்பார்வையாளர், வருமானப் பரிசோதகர் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வலிகாமம் தெற்கு, மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் வருமான மேற்பார்வையாளர், பரிசோதகர் போன்றவர்களின் பிரயாணப் படி, நியமனம், பயிற்சி, பதவி உயர்வு தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (29)

### 'கண்ணீர்ப் பயணங்கள்' நூல் வெளியீட்டு விழா

கண்ணீர்ப் பயணங்கள் பாகம் (01), பாகம் (02) நூல்கள் வெளியீட்டு விழா நாளை காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தமிழ்த்தாய் வெளியீட்டகத்தினால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, வெளியீட்டுரையினை நிகழ்த்துவார். சிறப்புப் பிரதியை அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் வழங்கி வைப்பார். (29)

### பங்குச்சந்தைக் கருத்தரங்கு

வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் பங்குத் தரகர் நிறுவனமும், ஹற்றன் நஷனல் வங்கியும் இணைந்து நடத்தும் பங்குச்சந்தை பற்றிய கருத்தரங்கு ஒன்று இன்று மாலை 3.00 மணிக்கு யாழ்.வணிகர் கழக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் நுகர்வோர் வங்கிச்சேவை என்ற தலைப்பில் நுகர்வோர் வங்கிப் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் பிறேமராஜாவும், 'பங்குச்சந்தை பற்றிய அறிமுகம்' என்ற தலைப்பில் கொழும்பு பங்குச் சந்தையின் யாழ்.கிளை முகாமையாளர் சிவானி திருஞானசம்மந்தனும், முதலீட்டுத் தீர்மானங்களை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பாக ஹற்றன் நஷனல் வங்கி பங்குத்தரகர் நிறுவனத்தின் ஆராய்ச்சி முகாமையாளர் ஹசிந்த பிரேமரட்னேயும் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

### பொன்விழா

கலைவாணி சனசமூக நிலையத்தின் பொன்விழா நிகழ்வுகள் சனசமூகநிலைய மைதானத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

சனசமூக நிலையத் தலைவர் க.தர்மராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக, பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அ.சுப்பிரமணியம், வலி. தென்மேற்கு பிரதேசசபை செயலர் பி.விக்டர், வலி தென்மேற்கு சனசமூகநிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.கந்தசாமி, வடலியடைப்பு வலய அரசியற்துறைப் பொறுப்பாளர் மலையழகன், ஓய்வுபெற்ற ஆசிரியை பண்டிதை பொன்.பாக்கியம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (63)

### உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

தெல்லிப்பளை கல்விக்கோட்டமட்ட உதைபந்தாட்ட இறுதிப்போட்டி இன்று பி.ப 2.00 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் 14,16,18 வயதின் கீழ்ப் பிரிவில் யூனியன் கல்லூரியை எதிர்த்து அருணோதயா கல்லூரி மோதவுள்ளது. இந்தப் போட்டியில் முதன்மை விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (48)

## ஹற்றன் நஷனல் வங்கியின் நெல்லியடி கிளை திறப்பு!

நெல்லியடியில் ஹற்றன் நஷனல் வங்கியின் காரியாலயமொன்று நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

ஹற்றன் நஷனல் வங்கியின் தலைமைப்பீடத்தைச் சேர்ந்த உதவிப் பொதுமுகாமையாளர் ராஜேந்திரா தியாகராஜா இந்தக் கட்டடத் திறப்பு விழாவின் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக ஹற்றன் நஷனல் வங்கியின் வடக்கு - கிழக்குப் பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் கிருசாந்தி தம்பையா, ஹற்றன் நஷனல் வங்கிகளின் தலைமைப்பீட உதவிப் பொதுமுகாமையாளர் அனோஜா கருணரட்ண, ஹற்றன் நஷனல் வங்கிகளின் சிரேஷ்ட முகாமையாளர் என்.பிறேமராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த வங்கி - ஹற்றன் நஷனல் வங்கியின் கடன் திட்டம், சேமிப்பு, அடகு பிடித்தல், நாணயமாற்று முதலான சகல நடவடிக்கைகளையும் நேற்றுமுதல் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கண்காட்சியும் கலாசார விழாவும்

வலிகாமம் வடக்கு கலாசார பேரவை மற்றும் மல்லாகம், தெல்லிப்பளை, கட்டுவன், வசாவிளான் உட்பட மீளக்குடியமர அனுமதிக்கப்படாத மக்கள் இணைந்து நடத்தும் பண்பாட்டுக் கோலங்கள் கண்காட்சி மற்றும் கலாசார விழா என்பன வலி வடக்கு பிரதேச செயலகத்தில் இன்றிலிருந்து தொடர்ந்து மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளது.

வலி. வடக்கு பிரதேச செயலர் அ.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இன்று கண்காட்சியும், நாளையும், நாளை மறுதினமும் கலாசார விழாவும் நடைபெறவுள்ளது. (29)

## யாழ்.மாநகர சபையின் சிறுவர் தின நிகழ்வுகள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாநகரசபையும் யுனிசெவ் அமைப்பும் இணைந்து நடத்தும் சிறுவர் தின சிறப்பு நிகழ்ச்சிகள் இன்று யாழ். பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளின்போது சிறுவர்களது ஆளுமைத் திறன்கள், தொழில்நுட்ப அறிவினை வளர்த்தெடுக்கும் பயிற்சிப் பட்டறை மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, இன்றைய தினம் பாடசாலை மாணவர்களை அங்கத்தவர்களாகச் சேர்த்துக்கொள்வதற்கு சலுகைக் கட்டணங்களை அமுல்படுத்த யாழ்.மாநகரசபை முன்வந்துள்ளது.

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கே இந்தச் சலுகை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, யாழ்.பொதுசன நூல் நிலையம் இன்று காலை 8.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை வாசகர்களுக்காகத் திறக்கப்பட்டிருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (31,90)


சங்கானை




தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 6.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு




காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே)

தனது சேவையின் மூன்றாம் ஆண்டில் கால் பதிக்கும் நமது ஈழநாடு

"உண்மையை எழுதி, நல்லதைப் பெருக்கி" என்ற வாக்கியத்திற்கு அமைய என்றும் எங்கள் உள்ளங்களில் நிறைந்து நீடூழி வாழ வாழ்த்துகின்றோம். வாழ்க வளமுடன்

ஸ்ரீ.சிவகஜனி, ஸ்ரீ.ஷாரங்கன்.

அம்பாள் ஸ்ரோர்ஸ் அன் ஹொல்சேல்ஸ் திருமண புந்தல்சேவை

உரிமையாளர், கை.ஸ்ரீஸ்காந்தன், (C/3209) 1 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

இரண்டாவது ஆண்டை நிறைவு செய்யும் நமது ஈழநாட்டுக்கு வாழ்த்துக்கள்

சகலவிதமான பாடசாலை உபகரணங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும், மலிவு விற்பனையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு:

Trust book & Paper Merchants

(C/3253) 105, K.K.S. Road, Chunnakam.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ந.ஜிபிசன்
முகவரி : தும்பளை, பருத்தித்துறை.

முதலாவது அகவையில்



பெயர் : ச.சுலக்ஷன்
முகவரி : வசந்தபுரம், இளவாலை.

எட்டாவது அகவையில்



பெயர் : ம.இந்துஜா
முகவரி : கூவில், புலோலி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளுடன் இணையச்சென்ற சிறுவர்கள் ஒப்படைப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் அமைப்பில் சுயவிருப்பத்தின் பேரில் இணையச்சென்ற இரண்டு சிறுவர்கள் யுனிசெவ் ஊடாக நேற்று மாலை பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

35 ஆம் கொலனியைச் சேர்ந்த சோதிலிங்கம் சந்திரதாஸ் (வயது -14) தாந்தாமலையைச்சேர்ந்த விலங்கிப்போடி சிறிஸ்கந்தராஜா (வயது 14) ஆகியோரே பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் மட்டக் களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிர் வாகத்துறை பொறுப்பாளர் தயா மோகன் இவர்களை பெற்றோரிடம் கையளித்தார்.

# மாவீரர் நினைவுக்கற்கள் கோப்பாயில் திரைநீக்கம்!

கடந்த 16.12.1997 அன்று யாழ். மாவட்டத்தில் இராணுவ சுற்றி வளைப்பின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்புலி மேஜர் தேன முதன் (யூரிகுருஸ் - பிரபாகரன்),

கடந்த 12.06.1997 அன்று யாழ். மாவட்டத்தில் இராணுவ சுற்றி வளைப்பின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்புலி லெப்ரினன்ட் இறையரசன் (செல்வராசா -அமல் ராஜ்),

கடந்த 30.09.1995 அன்று யாழ். மாவட்டத்தில் இராணுவ சுற்றி வளைப்பின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்புலி லெப்ரினன்ட் கலையரசன் (இராசு - தம்பி ராசி) ஆகிய மாவீரர்களினது திருவுருவப் படங்கள் நேற்று பி.ப. 5 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் மக்கள் வணகத்துக்காக வைக்கப்பட்டு வீர வணக்கக்கூட்டம் நடைபெற்றது.

வீரவணக்க உரைகளையடுத்து மாவீரர்களின் நினைவுக்கல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடப்பட்டது. இந்த நிகழ்வில் பொது மக்களும், போராளிகளும் கலந்து கொண்டனர்.

## உடன் பேச்சுக்களை...

இந்த விடயத்தில் உரிய அழுத்தத்தை இலங்கை அரசாங்கத்திற்கும், ஜனாதிபதிக்கும் பிரயோகிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி கொண்டுள்ள இரட்டை நிலைப்பாடு மற்றும் தெளிவற்ற கருத்து வெளிப்பாடுகள் குறித்து அமெரிக்கத் தூதுவருக்கு தாம் எடுத்துவிளக்கியதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

கிழக்கில் இராணுவ ஒத்துழைப்புடன் விடுதலைப் புலிகள்மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்தும் குறிப்பிட்ட இவ்வாறான தாக்குதலை நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இல்லாது செய்துவிடும் அபாயம் குறித்தும் தாம் எடுத்துக் கூறியதாக அவர் மேலும் தெரிவித்தார். (01)

## வீடுகளுக்கு வாடகை...

தோமஸ் சவுந்தரநாயகம், கியூடெக் நிறுவன இயக்குநர் ஜெயக்குமார் அடிகளார், முன்னாள் குருமுதல்வர் செல்வராஜா, வணபிதா பேணாட், ஆகியோரும் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் உயர் இராணுவ அதிகாரிகள், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சமாதானத்துக்கான நல்லெண்ணக்குழு உறுப்பினர்கள் ஏ 9 சோதனைச்சாவடியின் நேரத்தினை நீடிக்குமாறும் உயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளில் மக்களை மீளக்குடியமர நடவடிக்கை எடுக்குமாறும், கேரதீவு சங்குப்பிட்டி பாதையினை திறக்குமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த யாழ். கட்டளைத் தளபதி விக்டோறியா வீதியினை தற்போது திறக்கமுடியாது. ஏ 9 பாதை மூடும் நேரத்தினை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகினறோம்.

கேரதீவு சங்குப்பிட்டி பாதை திறப்பது தொடர்பாக உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தவேண்டும். அத்துடன், உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்களின் வீடுகளுக்கு வாடகைவழங்கவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் -

உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே 600 மீற்றர் தூரத்தில் வீடுகளைக் கொண்ட மக்கள் அவை தமது சொந்த வீடுகள் என உறுதிப் படுத்திய பின்னர் அங்கு குடியமரமுடியும் எனவும் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

# சமாதான முயற்சிகளின் பேரால் அரசு காலத்தைக் கடத்துகிறது!

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

அரசாங்கம் சமாதான முயற்சிகளின் பெயரால் காலத்தை இழுத்தடித்து வருவதுடன், இனவாதக் கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து நாட்டை மோசமான நிலைக்குள் தள்ளிக் கொண்டிருப்பதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவரான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன குற்றம் சாட்டியுள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பொருட்களின் விலையுயர்வைக் கட்டுப்படுத்துமாறு கோரி - கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக புதிய இடதுசாரி முன்னணியினர் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன அங்கு தொடர்ந்து பேசுகையில் -

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதுடன், கிராமப்புற மக்களையும் சமாதானத்துடன் இணைத்து - அனைவரும் ஒன்று சேர்ந்து உண்மையான அமைதியை ஏற்படுத்த வேண்டும்.

சமாதானப் பேச்சுக்கள் மனப்பூர்வமாக நடைபெறவேண்டும். அதனை ஏற்படுத்த அனைவரும் ஒன்றுதிரள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை - வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துமாறுகோரி ஜாதிக ஹெல உறுமயவும் நேற்று பத்திரமுல்ல சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

விலைவாசி உயர்வுக்கு எதிராக நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் இடைக்கால நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை நடத்துவதற்கு எதிராகவும் கோசம் எழுப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### கோதுமை மாவின் விலையை அதிகரிக்கத் திட்டம்

கோதுமை மாவின் விலையை மேலும் அதிகரிப்பதற்கு பிறிமா நிறுவனம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் அனுமதி கோரியுள்ளது.

டீசல் விலை உயர்வு காரணமாக ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 35 சதத்தால் அதிகரிக்கவே பிறிமா நிறுவனம் அனுமதி கோரியுள்ளது. (01)

### காமினி பொன்சேகா காலமானார்

பிரபல சிங்கள திரைப்பட நடிகரும், வட கிழக்கு மாகாணசபையின் முன்னாள் ஆளுனருமான காமினி பொன்சேகா நேற்றுமாலை காலமானார்.

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக அரசியலில் பிரவேசித்து பிரதி சபாநாயகராகவும் பதவிவகித்தவர். சிங்கள திரைப படங்களில் நடித்துப் புகழ்பெற்ற இவர் உலகில் சிறந்த நடிகருக்கான விருதுகள் பலவற்றைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இந்திர டி சில்வா ஓய்வுபெற்றார்

பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா நேற்று பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வுபெற்றார். இலங்கையின் 28 அவது பொலிஸ் மா அதிபரான இந்திர டி சில்வா இலங்கை பொலிஸ் சேவையில் 33 வருடங்கள் சேவையாற்றினார்.

பொலிஸ் மா அதிபராக இருந்து இந்திர டி சில்வா ஓய்வுபெற்றுச் செல்வதை முன்னிட்டு நேற்று கொழும்பில் உள்ள பொலிஸ் தலைமையகத்தில் விசேட வைபவம் ஒன்று இடம்பெற்றது. 29 ஆவது பொலிஸ் மா அதிபராக சந்திரா பெர்னாண்டோ நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பேச்சுக்களை....

களை அரசாங்கம் மீண்டும் ஆரம்பிக்குமானால் ஐக்கிய தேசியக் கட்சி சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவு வழங்கும்.

சமாதான முயற்சிகள் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அரசாங்கம் முதலில் அறிவிக்கவேண்டும். ஆலோசனைக் குழுக்கள் மூலமான பேச்சுவார்த்தை போன்ற பல்வேறு பேச்சுக்கள் மூலம் சமாதானப் பேச்சுவார்தையைச் சமாளிக்க ஜனாதிபதி முற்படுகிறார்.

சமாதான நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தும் வகையில் ஆட்சேபனை இயக்கம் ஒன்றை மேற்கொளள ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இளைஞன்....

இவர் நேற்று அதிகாலை வீதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக கிடக்கக் காணப் பட்டார்.

நீர்கொழும்பிலுள்ள நகைக் கடையொன்றில் தொழில்புரியும் இவர் விடுமுறையில் வீட்டிற்கு வந்திருந்தார். குறிப்பிட்ட ஆயுத பாணிகளால் இவரது மைத்துனரின் கடையொன்றும் கைக்குண்டு வீச்சிறகு இலக்காகியுள்ளது. இந்தச் சமபவம் குறித்து விசாரணைகள் மேற்கொண்டுவரும் ஏறாவூர் பொலிஸார் இவர் இராணுவத்தினருடன் தொடர்புடைய இளைஞர் எனத் தெரிய வந்திருப்பதாக குறிப்பிட்டனர்.

## புலிகளின்...

டங்களில் பங்குபற்றவுள்ளனர். எதிர்வரும் சனிக்கிழமை தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக எழுதப்பட்ட ஆங்கில நூல் ஒன்றும் சுவிஸில் வெளியிடப்படவுள்ளது.

# கிளிநொச்சியில் நேற்று பெண்கள் சங்கம நிகழ்வு



முதல் பெண் மாவீரர் 2 ஆம் லெப்டினன்ட் மாலதி நினைவாக - பெண்கள் சங்கம நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது. கிளிநொசசி பண்பாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு பெண்கள் சங்கம நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுசா ஏற்றினார். மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் பூவிழி தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில், 2 ஆம் லெப் மாலதியின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஈகச்சுடர் ஏற்றப் பட்டது.

பெண்கள் சமூகத்தில் எதிர் கொள்கின்ற பிரச்சினைகள் பற்றியும் அதனை எவ்வாறு எதிர்கொள்வது பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். கிளிநொச்சி பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் இந்த நிகழ்வை ஒழுங்குசெய்திருந்தது.

## அம்பாறையில்...

கான ஏற்பாடு தேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.அதாவுல்லாவின் பின்னணியில் இடம் பெற்றுள்ளதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில், தனிப்பட்ட அரசியல்வாதியின் சதிவேலை இதுவென்றும், தமிழ் - முஸ்லிம் உறவைப் பாதிக்கும் இந்த நடவடிக்கை கண்டிக்கப்பட வேண்டியது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, அக்கரைப்பற்றுப் பகுதியில் தமிழ் வர்த்தகர்களுக்குச் சொந்தமான கடைகள் நேற்றுக் காலையில் சேதப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து அந்தப் பகுதியில் பதற்றநிலை தோனறியது.

முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் மோதலை ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்ட வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை நேற்று அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் நடததப்பட்ட ஹர்த்தால் தொடர்பிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

தனது வளர்ச்சிப் படிகளில் மூன்றாம் ஆண்டில் காலடி பதிக்கும் நமது ஈழநாட்டிற்கு எமது நல்வாழ்த்துக்கள்.

கணனி பதிப்புத் துறையில், புதிய நாமத்தில்! புதிய உதயம்;

ஜெய்ராம் பிறின்ரேஸ்

JAYRAM PRINTERS

பொதுவான மற்றும் வர்த்தக நோக்கான ஓவ்செற், ஸ்கிறீன் பிறிண்டிங் வேலைகள், கணனி மூல வடிவமைப்பு வேலைகள் மற்றும் பிறிண்டிங் சம்பந்தமான சகல வேலைகளையும் தரமாக செய்து பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்

351, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இரண்டாம் ஆண்டு சிறப்பிதழ்

# ஐக்கிய நாடுகள் சபையின் மகாநாடும் உலகத் தலைவர்களின் அரசியல் நகர்வுகளும்


கே.ரீ.கணேசலிங்கம்

உலக வரலாற்றில் ஐக்கிய நாடுகள் சபைக்கெனத் தனியான பங்கும், தனித்துவமும் உண்டு. இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்பு நிறுவப்பட்ட இந்த அமைப்பு பனிப்போர் முடிந்த பின்பும் நிலைத்திருக்கும் சர்வதேச சபையாக அமைந்திருக்கிறது. அரசியல், பொருளாதாரம், போர், மனிதாபிமானம், நீதி, உரிமைகள் என உலகின் தனித்துவங்களைப் பேணிவரும் அமைப்பு என்ற பெருமை யைக் கொண்டது. சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப் பின்பு உலகத் தலைவர்களை ஓரணிக்குள் இழுத்து வைத்திருக்கும் தலைமை நாடாக அமெரிக்கா விளங்குவதனால் அதன் தலை நகரில் ஆண்டுக்கொரு முறை உலகத் தலைவர்கள் ஒன்றுகூடுவது வழமையான அரசியல் நிகழ்வாகும். அண்மையில் நியூயோர்க்கில் நிகழ்ந்த ஐ.நா. சபையின் நிகழ்வில் சில உலகத் தலைவர்கள் முன்வைத்த அரசியலைப் பரீசீலிப்போம்.



முதலில் உலகத் தைத் தலைமையேற்று நடத்தும்






அமெரிக்கத் தலைவரின் அரசியலாக விளங்கிய விடயத்தை நோக்குவோம், அவர் ஐ.நா. சபையை அமெரிக்காவின் சபையாகவே கருதி உரையாற்றினார். இரண்டு விடயத்தை முன்வைத்தார். ஜனாதிபதி புஷ் ஒன்று, அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்டுவரும் போர்களை நியாயப்படுத்துவதாக இருந்தது. இரண்டாவது, அமெரிக்கா அந்தப் போர்க் களத்தினால் உலகத்தில் ஒரு பகுதி மக்களை மட்டுமன்றி அனைத்துப் பிரிவினரையும் எப்படிக் கையாளப்போகின்றது என்பதை வெளிப்படுத்துவதாக இருந்தது. ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும், அமெரிக்காவால் நிகழ்த்தப்பட்டு வரும் போருக்குப் பிந்திய அரசியலில் ஜனநாயகமும், ஸ்திரத் தன்மையும் காணப்படுவதாகக் குறிப்பிட்டார். இந்த இரு நாடுகளையும் இஸ்லாமியர்கள் எப்படி மாறவேண்டும் என்பதற்கான முன்னோடி நாடுகளென புஷ் சுட்டிக் காட்டினார்.

பனிப்போர்க் காலத்தில் சட்ட ரீதியற்ற அரசாங்கங்களை ஊக்குவித்த அமெரிக்கா தற்போது அவற்றை விமர்சிப்பதோடு அமெரிக்காவின் போரினால் காபூலிலும், பாக்தாத்திலும் சட்டரீதியான ஆட்சிகள உலக சமாதானத்துக்கு உதவுவதோடு கடந்தகால சவால்மிக்க அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டதாகக் குறிப்பிட்டார். இரு நாடுகளிலும் நிகழும் வன்முறைகளால் அமெரிக்கா தனது உண்மையான நோக்கிலிருந்து விலகிச்செல்லாது எனச் சுட்டிக்காட்டினார்.

எனவே, இவரது உரையிலிருந்து தெளிவாவது ஈராக் - ஆப்கான் போன்ற நாடுகளின் நிலை ஏனைய நாடுகளிலும் அமெரிக்கா விடுக்கும் இன்னொரு எச்சரிக்கையாகவே காணப்படுகின்றது. இஸ்லாமிய உலகத்தை அமெரிக்க ஜனநாயக ஆதிக்கத்துக்குள் கொண்டுவருவதே அமெரிக்காவின் பிரதான நோக்கமாகவுள்ளது. அதனையே உண்மையான இலட்சியம் என்றும் மறைமுகமாக புஷ் சுட்டிக் காட்டினார். முழு இஸ்லாமிய உலகத்தையும் அமெரிக்காவின் காலடியில் வீழ்த்துவதையே இலக்காகக் கொண்டுள்ள அமெரிக்கா தனது அரசியல், பொருளாதார, இராணுவ இலக்குகளை அடைவதற்கான வழிமுறையாக இதனைக் கையாளுகின்றது. போரும் போருக்குப் பிந்திய ஜனநாயக சீரமைப்பையுமே அமெரிக்காவின் இஸ்லாமிய நாடுகள் மீதான அரசியலாக உள்ளது. இஸ்லாமிய மக்கள் எதிர்நோக்கியுள்ள அமெரிக்கசவால் மிக நீண்ட இலக்கைக் கொண்டிருப்பதாக வடிவமைக் கப்பட்டுள்ளது. தீவிரவாதத்தை மட்டுமே தமது உத்தியாகக் கொண்டியங்கும் இஸ்லாமிய உலகம் தமது போக்கிலும்மாறு தலைப்பற்றிச் சிந்திப்பதே மாற்று உபாயமாக அமையும். தனித்துத் தீவிரவாதத்தை எங்கும் வென்றதுமில்லை. அவ்வாறு பெற்றாலும், அதனை அதிககாலம் வீழ்த்த முடியாதென்றுமில்லை. தீவிரவாதம் ஒருபக்கம் தாக்குதலை நிகழ்த்தினாலும் மறுபக்கம் மக்களை அரசியலுக்குள் அதிகமாகப் பங்கெடுக்கச் செய்து மேற்கின் ஜனநாயகப் பாணியில் பதிலையும் யதார்த்தத்தையும் உணர்த்த வேணடும். அமெரிக்கா இஸ்லாமிய உலகத்தோடு அந்தக் கருத்தைக் கொண்டிருக்கின்றதா என்பதை விசேடமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.



அடுத்து முக்கியமான உரைகளை நிகழ்த்தியவர்களில் மிகப் பொருத்தமானவர்களாகத் தொன்னாசியத் தலைவர்கள் காணப்பட்டனர். இவர்களில் இந்தியப் பிரதமரின் அரசியல் நகர்வை நோக்குவோம்.

இந்தியப் பிரதமர் - பாதி சோனியாவாகவும், மீதி மன்மோகன் சிங்காகவும் தோற்றமளித்தார். அதிலும் நடையை உணர்த்த சோனியாவும், அதனை வழிநடத்த மன்மோகன் சிங் என்ற மூளையாகவும் செயற்பட்டார். அவரது உரையிலும் இந்த விஜயத்திலும் மூன்று விடயங்கள் தனித்துவம் பெற்றிருந்தது.

ஒன்று ஐ.நா. சபையில் இந்தியா நிரந்தர அங்கத்துவம் பெறுவதை வலியுறுத்துவதாகும். ஏறக்குறைய அதனை முழுமையாக அழுத்திய மன்மோகன்சிங் ஜப்பான், ஜேர்மன், உட்பட கூட்டு முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருந்த ஓர் அரசியல் நாகரிகத்தைக் கையாண்டார். இத்தகைய கூட்டான தந்திரம், நிரந்தரம், உறுப்புரிமை நாடுகளுக்கு முன்னனுபவத்தை வெளிப்படுத்துவதோடு, இந்தியாவின் கோரிக்கை பற்றி சீனா மௌனமாக இருந்துவிட்டது. ஆனால், பாகிஸ்தான் தனது எதிர்ப்பினைக் காட்டத் தவறவில்லை. இதனால் பிரதமரின் கோரிக்கையிலும் ஒரு பிசுபிசுப்பு ஏற்பட்டுவிட்டது.

இரண்டாவது, பாகிஸ்தான் - இந்தியப் பிரச்சினைபற்றி பிரதமர் மிகத் தந்திரமாக உரையாற்றினார். பாகிஸ்தானுடன் சுமுகத் தன்மையைப் பேணவும், பின்பற்றவும் இந்தியா தயாராகவுள்ளதெனக் குறிப்பிட்ட பிரதமர் இந்தியா பல விடயங்களில் பாகிஸ்தானுக்கு விட்டுக் கொடுப்புக்களை செய்வது போல், பாகிஸ்தானும் நடந்துகொள்ளுதல் வேண்டும் என்றார். பயங்கரவாதம் கூட்டாகத் தொழிற்படுவது போல் அதற்கு எதிரான போராட்ட சக்திகளாகிய அரசுகள் கூட்டாகத் தொழிற்பட்டு வெற்றியடையலாமெனக் குறிப்பிட்டார். பாகிஸ்தான் ஜனாதிபதியுடனான சந்திப்பைச் சுமூகமான உறவுக்கு உதவுமெனக் கருதிய மன்மோகன்சிங் இலாவகமாகவும், மிகத் தந்திரமாகவும் காய்களை நகர்த்தும் அரசியலை நிகழ்த்திக் காட்டினார். அதாவது பாகிஸ்தானைத் அனைத்துக்கொண்டு அதன் தீவிரத்தன்மையை முழு உலகத்தோடும் இணைத்துக் கையாளுவதே மன்மோகன்சிங்கின் தந்திரமாகும். இது பெருமளவுக்கு வெற்றியளித்ததென்றே கூறலாம்.

மன்மோகனின் மூன்றாவது நகர்வே அதிகம் சர்ச்சையைக் கிளப்பக்கூடியதொன்றாகும். இதனை மன்மோகன்சிங் மேற்கொண்டதாலேயே சோனியாவை மூளையாக வல்ல கால்களாகக் கொண்டார் என விமர்சிக்கத் தோன்றியது. என்னவோ மன்மோகன் இந்தியாவிலும், தேர்தல் காலத்திலும் சோனியா தான் மூளை என்றார்கள். ஆனால், இந்தியாவுக்கு வெளியே சோனியா கால்கள்தான் மன்மோகனே. பிர தமரின் மூளையாகக் தொழில் பட்டார்.

அதாவது, இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைபற்றித் தேர்தல் காலங்களின் காங்கிரஸ் கொண்டிருந்த போக்கை யெல்லாம் மறந்து 1990 ஆம் ஆண்டு சீர் திருத்தத்தை நீடிக்கப் போவதாக இந்த விஜயத்தின் போது வலியுறுத்தியிருந்தார் பிரதமர். பிரித்தானியாவுடன் பொரு ளாதார குழு ஒன்றை நிறுவி இந்திய - பிரித்தானிய பொருளாதர உறவைப் பலப்படுத்தினார். அவ்வாறே ஏனைய உலகத் தலைவர்களிடமும், அமெரிக்காவிடமும் நெருக் கமான உறவை ஏற்படுத்த அனைத்து நடவடிக்கையிலும் ஈடுபட்டார்.




அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை சந்தித்த போது பிரதமருக்கும் - ஜனாதிபதிக்கும் இடையில் பாரிய ஒத்துழைப்புகளை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நிகழ்ந்தன. பொருளாதாரம், பாதுகாப்பு, விண்வெளி, போன்ற பல விடயங்களில் இரு நாட்டுத் தலைவர்களுக்குமிடையில் ஒரு நெருக்கம் ஏற்பட்டது. நேரடி முதலீடு பற்றிய வாய்ப்பைக் கோரிய பிரதமர் அமெரிக்க வர்த்தகர்களையும், முதலீட்டாளர்களையும் இந்தியாவை நோக்கி வருமாறு அழைப்புவிடுத்தார். அமெரிக்க வாழ் இந்தியர்களை ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கோரிக்கைவிடுத்தார்.

காங்கிரஸ் தேர்தல் காலத்தில் முன்வைத்ததையும், தனது கூட்டணியையும் மறந்த நிலையில் பிரதமர் அமெரிக்காவிடம் மண்டியிட்டுள்ளார் என்றே கூறத் தோன்றுகிறது. அமெரிக்கா வரவேற்றதுடன், வெள்ளைமாளிகை 'என்றுமில்லாத நெருக்கம்' என்ற சொற்பதத்தைப் பாவித்தது. அந்தளவுககுப் பிரதமரின் விட்டுக் கொடுப்புத் தன்மை நோக்கப்படுகின்றது.

இந்தியாவும், அமெரிக்காவும் நெருக்கினால் பாகிஸ்தானை தனிமைப்படுத்தலாமென மன்மோகன்சிங் கருதியிருப்பாராயின் அதனைவிட முட்டாள் சிந்தனை வேறு எதுவுமிருக்காது. எனவே பிரதமரின் பொருளாதாரம் தொடர்பான கொள்கைப் போக்கு பாரிய விமர்சனத்தை உள்நாட்டில் உள்ளாக்கும். காங்கிரஸோ, பிரதமரோ இது பொருளாதாரம் எனச் சாக்குப் போக்குச் செய்துவிடலாம். ஆனால், பொருளாதாரம் அரசியலை நிர்ணயிப்பதும், அரசியல் பொருளாதாரத்தை நிர்ணயிப்பதும் இயல்பான ஓரம்சமாகும். சீனாவை அமெரிக்கா பொருளாதார சார்பு நிலையிலே வைத்துக் கையாண்டு வருகின்றது. சீனா ஐ.நா.விலோ அல்லது உலக அரசியலிலோ பிரகாசிக்க முடியாத நிலைக்கு அமெரிக்காவுடனான பொருளாதார இசைவே அடிப்படைக்காரணமாகும். பாதுகாப்புச்சபை நிரந்தர அங்கத்துவத்தைப் பெறுவதால் எந்த இலாபமும் உலகம் அடையப்போவதில்லை. வேண்டுமாயின் இந்தியா மார்புதட்டிக் கொள்ளலாம். தன்னிடமும் வீட்டோ அதிகாரம் உண்டென, வேறு எதனையும் சாதித்துவிட முடியாது. உலக அரசியல் தலைவர்கள் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கும், ஆதிக்க விஸ்தரிப்பை ஏற்படுத்தத் திட்டமிடுகிறார்களே அன்றி அரசுகளும், அதிகாரங்களும் மக்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராகிறார்களில்லை. அந்த வரிசையில் கலாநிதி மன்மோகன்சிங்கும் விதிவிலக்கானவர் அல்லர் என்பதை அவரது நியூயோர்க் விஜயம் நிறுவியுள்ளது.

அடுத்து பாகிஸ்தான் தலைவர் முஷாரப்பின் ஐ.நா உரையின் அரசியலை நோக்குவோம்.

பாகிஸ்தான் தலைவர் இந்தியாவைச் சாடுவதில் பின்னிக்கவில்லை. ஆனால் இவரது அரசியலின் போக்கிலும் மன்மோகன் சிங்கின் போக்கிலும், சுமூகத் தன்மை காணப்பட்டது. தமது பிரச்சினைகளுக்கு சுமூகமான, உரையாடல் மூலமான இந்தத் தீர்வுகளை நோக்கிய அசைவுக்கு இணங்குகின்ற போக்குகள் காணப்பட்டது. ஆனால் முஷாரப் அமெரிக்காவை திருப்திப்படுத்துவதில் அக்கறையாக இருந்தார். பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றிணைந்து போராடுவதில் ஆர்வம் காட்டும் பாகிஸ்தான் பயங்கரவாதத்தை அழிப்பதில் தீவிர நிலைப்பாட்டைக் காட்டப் போவதைத் தெளிவுபடுத்தினார். இவரது உரையினை இந்தியா ஏற்றுக் கொண்டதுடன் தந்திரமான அணுகுமுறையையும் பரஸ்பரம் ஆற்றுவதில் இணையாக செயற்பட்டனர்.

ஆனால், அமெரிக்கா ஈராக்குக்கு படையை அனுப்புமாறு பாகிஸ்தானிடம் விடுத்த கோரிக்கையை முஷாரப் நிராகரித்தார். இது அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்குமான நெருக்கத்தைத் தூண்டிவிடுமோ என்ற சந்தேகம் பர்கிஸ்தானுக்கு அதிருப்தியளித்ததாக உள்ளது. இந்தியா - இலங்கை விடயத்தை அமெரிக்க ஜனாதிபதியுடன் பகிர்ந்து கொண்ட போக்கு காஷ்மீர் அரசியலின் பங்கை கிளப்புவதற்கு பாகஸ்தானுக்கு சந்தர்ப்பம் அளிப்பதாக உள்ளது. ஆனால் அமெரிக்கா இந்தியாவையும் பாகிஸ்தானையும் வைத்து அரசியல் நடாத்தும் தந்திரத்தை தொடர்ந்த வண்ணமுள்ளது.

இறுதியாக இலங்கை ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கவின் உரையின் உயர் நோக்கத்தைப் பரிசீலிப்போம்.

**இலங்கை ஜனாதிபதி சமாதானத்தின் பக்கத்தை ஐ.நா. சபையில் மீண்டும் ஒரு தடவை முழங்குகிறார். ஜனநாயக அடிப்படையில் மனித உரிமைகளை மதிக்கும் ஒரு பன்முக அரசியல் சமூகத்தையும், நல்லாட்சியையும் உருவாக்குகின்ற இலங்கையில் எல்லா மக்களையும் திருப்திப்படுத்துகின்ற தீர்வு ஒன்றை விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலம் காண்பதற்கு பற்றுறுதி பூண்டுள்ளோம் என ஆரம்பித்து, புத்த பெருமானின் சமாதானம் என்ற நற்சிந்தனையில் முடித்துள்ளார்.**

இலங்கை ஜனாதிபதி சமாதானத்தின் பக்கத்தை ஐ.நா. சபையில் மீண்டும் ஒரு தடவை முழங்குகிறார். ஜனநாயக அடிப்படையில் மனித உரிமைகளை மதிக்கும் ஒரு பன்முக அரசியல் சமூகத்தையும், நல்லாட்சியையும் உருவாக்குகின்ற இலங்கையில் எல்லா மக்களையும் திருப்திப்படுத்துகின்ற தீர்வு ஒன்றை விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலம் காண்பதற்கு பற்றுறுதி பூண்டுள்ளோம் என ஆரம்பித்து, புத்த பெருமானின் சமாதானம் என்ற நற்சிந்தனையில் முடித்துள்ளார்.

இவரது உரை சமாதானத்தின் பால் இலங்கை கொண்டிருக்கும் அவாவைக் காட்டுவதாக அமைந்தது. நோர்வேயின் பங்கை உலக நாடுகளின் ஒத்துழைப்பையும் நினைவு கோர்ந்து பாராட்டிய சந்திரிகா உலகத்தின் பார்வையை தனது பக்கம் திருப்புவதில் வெற்றி கண்டார். சமாதானத்துக்குத் தனது அரசு தடையில்லை என் பதை காட்டிய சந்திரிகா விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வரவில்லை எனக் குற்றச்சாட்டுடன் மிக நாகரீகமாக சுட்டிக் காட்டியிருந்தார். ஆனால் அவர் இலங்கைக்கு வந்தவுடன் நோர்வேயை பழிதீர்பார் சமாதானப் பேச்சில் அதிக அக்கறை இன்றி செயற்படுவார். போருக்குரிய ஆயத் தத்தினை மேற்கொள்வார். இவை எல்லாம் அவரது இயல்பான நகர்வுகள் தான். உலகத்துக்கு ஒரு தோற்றத்தையும், இலங்கைக்கு ஒரு தோற்றத்தையும் காட்டிக் கொள்ளும் தலைவர் அவர். அவரது ஆட்சியைப் பற்றிய மிகக் கொடுமையான அனுபவம் தமிழ் மக்களிடம் உணடு. மற்றும்படி இலங்கை ஜனாதிபதி ஐ.நா.வின் பிரகாசமானவராகக் காணப்பட வில்லை என்பதையும் கூறித்தான் ஆகவேண்டும்.

எனவே ஐ.நா.வை உலகத் தலைவர் தமது அரசியலையும், அதன் உள்நோக்கங்களையும், வெளியிடும் மையமாக மாற்றி வருகின்றனர். இவ்வாறு ஐ. நா.வை அமெரிக்க நலனுக்காகப் பயன்படுத்தும் அரசியல் தலைமைகளின் பின்பற்றுகையில் உலகத் தலைவர்களும் மாறிவிட்டார்கள். ☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் ஆண்டு சிறப்பிதழ்

# மந்தகதியில் நகரும் பெண்களின் அரசியல் பிரவேசம்

உலகின் முதலாவது பெண் பிரதமரையும் - பெண் ஜனாதிபதி ஒருவரை, இரண்டு தடவைகளும் தெரிவு செய்த இலங்கையில், பெண்களின் அரசியல் பிரவேசம் மிக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது.

இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாக இருப்பதன் காரணமாகப் பெண்களின் உரிமைகள், வேலைவாய்ப்புகள் மற்றும் சர்வதேச விவகாரங்களில் உரிய இடத்

அவர்கள் தலைமைத்துவப் பங்களிப்பை வெகு சிறப்பாகவே செய்து முடித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டாரநாயக்காவின் படுகொலையின் விளைவாக 1960 ஆம் ஆண்டில் சிறிமாவோ அரசியலுக்குள் நுழைந்து - புதிய வரலாறு படைத்தார். உலகில் முதற்

கண்ட இவர்கள், சர்வதேச பிரபலம் பெறுமளவுக்குத் தமது தலைமைத்துவ ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆயினும் பெண்களின் அரசியல் பிரவேசம் விருப்பத்துடன் நிகழும்போது அங்கே ஆளுமையும் சாமத்தியமும் உள்ள தலைமைத்துவப் பங்கு அதிகமாக

பத்திரங்களில் 20 வீதம் பெண் வேட்பாளர்களை நிறுத்தவேண்டுமென வலியுறுத்தப்பட்டது. தற்போது உள்ளூராட்சி சபைகளில் 2.7 வீதமான பெண்களின் பங்களிப்பே இருந்துவரும் நிலையை மாற்றுவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

மாகாணசபை மட்டத்தில் 2001 ஆம் ஆண்டில் 4.4 வீதமாகவும் இப்போது 3.55 வீதமாகவும் பெண்களின் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது.

கடந்த 5 நாடாளுமன்றங்களில் நான்கில் பெண் பிரதமர், மற்றும் பெண் ஜனாதிபதி ஆட்சியில் இருந்த போதும் பெண்களின் பிரதிநிதித்துவம் மோசமான நிலையிலேயே இருந்து
















கொண்டிருக்கிறது.

தெற்காசியாவிலேயே மிகவும் குறைந்தளவு பெண் பிரதிநிதித்துவம் உள்ள நாடாக இலங்கை இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் 8.8 வீதமும் இஸ்லாமிய நாடான பாகிஸ்தானில் 20





















தைப் பெற முடியாதிருக்கிறது.

ஆண், பெண் சமத்துவத்தைப் பேணும் நோக்கிலேயே 1931 ஆம் ஆண்டு இலங்கை மக்களுக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது. பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சியிலிருந்த நாடுகளில் முன்னோடியாக மட்டுமன்றி - தெற்காசியாவில்கூட இலங்கையில்தான் முதன்முதலில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது.

அதற்குமுன்னர் இலங்கையில் மட்டுமன்றி வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில்கூட - பெண்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டு வந்தது. இப்போதும்கூட சில நாடுகளில், குறிப்பாக - இஸ்லாமிய அடிப்படைவாத ஆட்சி நிலவும் நாடுகளில் பெண்களின் அரசியல் பிரவேசம், வாக்குரிமை கட்டுப்படுத்தப்படுகின்றது.

அப்படிப்பட்ட நாடுகளில் இருந்துகூட பெண்கள் அரசியலுக்குள் நுழைவதும் - தலைமைத்துவம் வகிப்பதும் இப்போது அதிகரித்துள்ள அதேவேளை - இலங்கையில் மட்டும் பெண்களின் அரசியல் பிரவேசம் மந்த கதியிலேயே சென்றுகொண்டிருக்கின்றது.

இலங்கையின் சனத்தொகையில் 51 வீதமானோர் பெண்களாகவும், வேலைப் படையினரில் 53 வீதமானோர் பெண்களாகவும் இருக்கின்றநிலையில் - அவர்கள் அரசியலில் மட்டும் மிக மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கின்றனர்.

பெண் பிரதமர், பெண் ஜனாதிபதியைக் கண்டுவிட்ட நாட்டிலிருந்து, பெண் அரசியல் தலைவர்கள் தலைமை வகித்த கட்சிகளினூடாக வேனும் - பெண்கள் அரசியலில் நுழைவது குறைவாகவே உள்ளது.

இலங்கையின் அரசியல் வரலாற்றைப் பொறுத்தவரையில் - பெண்கள் விரும்பி அரசியலுக்குள் நுழைவதென்பது மிக மிகக் குறைவாகவே இருந்துவருகின்றது. குடுமப அரசியல் பின்னணி மற்றும் சந்தர்ப்பவசத்தால் அரசியலுக்குள் நுழைந்த பெண்களே அதிகமாகும்.

சந்தர்ப்பவசத்தால் அரசியலுக்குள் நுழைந்தாலும்

பெண் பிரதமராக மட்டுமன்றி, தள்ளாத வயதிலும் பிரதமராகவே மரணத்தைத் தழு

இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இஸ்ரேலை உருவாக்கு

பெண்களுக்கென போனஸ் ஆசனம் ஒதுககீடு, செய்யவும் நாடாளுமன்றத்தில் 25 வீதம்

வீதமும் பெண்க்ளின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இருந்துவரும் நிலையில்- இலங்கையில் மட்டும் பெண்கள் பிரதிநிதித்துவ வீதமும், அரசியல் பிரவேசமும் வீழ்ச்சியடைந்து கொண்டே செல்கின்றது.

அட்லின் மொலமுரே, எஸ். சரவணமுத்து, மீனா ரட்ணம், ஆயிஷா ரவூப், அஞ்ஞான் உம்மா போன்றவர்கள் வித்தியாசமான சமூகக் கட்டமைப்புக்களிலிருந்து அரசியலுக்குள் பிரவேசித்தவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆயினும், குடும்ப அரசியல் பின்னணி காரணமாக அரசியலுக்குள் நுழைந்த விவியன் குணவர்த்தன, குசுமா ராஜபக்ஷ, மல்லிகா ரத்வத்தை, லலிதா ராஜபக்ஷ, நிருபமா ராஜபக்ஷ, ஷமல் ராஜபக்ஷ, சிவா ஒபயசேகர, விமலா விஜயவர்த்தன, ரேணுகா ஹேரத், அமராபிரியசீலி ரத்னாயக்க போன்றவர்கள் அரசியலில் நிலையான இடங்களைப் பெற்றது போல, இவர்களால் நிலை பெற முடியவில்லை.

இப்போது நாடாளுமன்றில் அங்கம்வகிக்கும் பவித்ரா வன்னியராச்சி, தலதா அத்துகோரன, அமராபி யசலி ரத்னாயக்கா, சுமேதா ஜெயசேன, பேரியல் அஷ்ரப், சந்திரா பண்டார போன்றவர்கள் ஏதோ ஒரு வகையில் குடும்ப அரசியல் பின்னணியில் அரசியலுக்கு வந்தவர்கள்தான்.

பத்மினி சிதம்பரநாதன், அஞ்ஞான் உம்மா, தங்கேஸ்வரி, சுஜாதா அழகக்கோன் போன்றவர்கள்தான் உழைக்கும் வர்க்கத்திலிருந்து உருவானவர்கள்.

இப்படி சந்தர்ப்பவசத்தால் இடத்தை நிரப்பும் பெண்களை மட்டும்கொண்டதாக இலங்கை அரசியல்நிலை இருக்கும் வரை, பெண்களின் உரிமைகள், சமத்துவம் என்பன முற்றாகப் பேணப்படமாட்டாது.

சமூகக்கட்டமைப்பிலிருந்து விலகித் தமது தலைமைத்துவ ஆற்றலை வெளிப்படுத்த பெண்களின் அரசியல் பிரவேசம் அவசியமாகிறது. சனத்தொகையில் 51 வீதத்தைக் கொண்டிருக்கும் பெண்கள், ஏதோ அற்ப சொற்ப சதவீதத்தில் அரசியலில் பங்கேற்று இருப்பது சர்வஜன வாக்குரிமையின் பயனை 70 ஆண்டுகளாகியும் நாடு அடையவில்லை என்பதையே வெளிக்காட்டுகிறது. ★

*சந்தர்ப்பவசத்தால் அரசியலுக்குள் நுழைவதென் பது இலங்கையில் மட்டு மன்றி ஆசிய நாடுகளில் - குறிப்பாக தெற்காசியாவில் ஒரு மரபாகவே மாறிவிட்டது.*

*இந்தியாவில் இந்தி ராகாந்தி, சோனியாகாந்தி, பாகிஸ்தானில் பெனாசிர் பூட்டோ, பங்களாதேஷில் காலிதாஷியா, ஹசீனா வஜட, பிலிப்பைன்ஸில் கொர சோன் அக்கனோ, இந்தோ னேசியாவில் மேகவதி சுகர்ணபுத்திரி, பர்மாவில் ஆங் சாங் சூகீய் உறவுகள் பழிவாங்கப் பட்டதால் அரசியலில் பிரவேசம் செய்த தலைவிகள் பட்டியல் பெரியது.*

வினார்.

இவரைப் போலவே பண்டாரநாயக்கா - சிறிமாவோவின் புதல்வியான சந்திரிகாவும் தன் கணவனின் மரணத்தையடுத்து அரசியலுக்குள் நுழைந்து தற்போதும் ஜனாதிபதியாக இருந்து வருகிறார்.

லலித் அத்துலத் முதலிக்குப் பின் அவரது மனைவி சிறிமானி, காமினி திசநாயக்கவுக்குப் பின்னர் சிறிமா, அஷ்ரப்புக்குப் பின்னர் பேரியல் என்று தமது கணவன்மாரின் மரணத்துக்குப் பின்னர், அரசியலில் நுழைந்த பெண்களே அதிகம்.

சந்தர்ப்பவசத்தால் அரசியலுக்குள் நுழைவதென்பது இலங்கையில் மட்டுமன்றி ஆசிய நாடுகளில் - குறிப்பாக தெற்காசியாவில் ஒரு மரபாகவே மாறிவிட்டது.

இந்தியாவில் இந்திராகாந்தி, சோனியாகாந்தி, பாகிஸ்தானில் பெனாசிர் பூட்டோ, பங்களாதேஷில் காலிதஷியா, ஹசீனா வஜட், பிலிப்பைன்சில் கொரசோன் அக்கினோ, இந்தோனேசியாவில் மேகவதி சுகர்

அரசியல்

ணபுத்ரி, பர்மாவில் ஆங் சாங் சூகீய் என உறவுகள் பழிவாங்கப்பட்டதால் அரசியலில் பிரவேசம் செய்த தலைவிகள் பட்டியல் பெரியது.

சந்தர்ப்பவசத்தால் நாட்டுக்கோ அல்லது அரசியல் கட்சிக்கோ [illegible] குமளவுக்கு முன்னேற்றம்

வதற்கு பெரும்பாடுபட்ட கோல்டா மேயர், பிரிட்டிஷ் பிரதமராக இருந்த இரும்புச் சீமாட்டி மாகிரட் தட்சர் போன்றவர்களின் தலைமைத்துவ ஆற்றல் உலகம் போற்றுமளவுக்கு இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இலங்கை அர

பெண்களுக்கு ஒதுக்கீடு செயயவும். தேசியப் பட்டியலில் 25 வீதம் பெண்களுக்கு ஒதுக்கவும் மேலும் இத்திட்டத்தில் யோசனை கூறப்பட்டிருந்தது.

உள்ளூராட்சி சபைகளில் தற்போது 2.7 வீதமாக இருக்கும் பெண்களின் பிரதி






சியலில் பெண்களின் அரசியல் பிரவேசம் மிகக் குறைவாகவே இருந்துவருவதால்

நிதித்துவத்தை அதிகரிப்பதனூடாக அரசியலில் பெண்களின் பங்களிப்பு

## க.கலானந்தி

- அவர்களின் சிறந்த ஆளுமையையும், தலைமைத்துவ ஆற்றலையும் வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் மிகக்குறைவாகவே உள்ளது.

பெண்களின் அரசியல் பிரவேசத்தை அதிகரிக்கச் செய்வதற்குக் கடந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் பெண்கள் விவகார அமைச்சராக இருந்த அமரா பியசீலி ரத்நாயக்கா திட்டம் ஒன்றை முன்வைத்திருந்தார்.

உள்ளூராட்சி சபைகளில் பெண்களின் ஆகக் குறைந்த பிரதிநிதித்துவம் 25 வீதமாக இருக்க வேண்டுமென்று இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டது.

[illegible]மைய அரசியல் கட்சிகள் தமது நியமனப்

அதிகரிக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் இத் திட்டம் நடைமுறைக்குவரவில்லை.


தற்போது, நாடாளுமன்றத்திலுள்ள 225 மொத்த ஆசனங்களில் பத்து உறுப்பினர்கள் மட்டுமே பெண்கள். மாகாணசபைகளில் 3.1 வீதமும், உள்ளூராட்சி சபைகளில் 2.7 வதமும் மட்டுமே பெண்கள் அங்கம் வகிக்கின்றனர்.

2002 ஆம் ஆண்டு உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிட்ட 3825 வேட்பாளர்களில் 77 பேர் மட்டுமே (1.7வீதம்) பெண்களாக இருந்தனர்.


நாடாளுமன்றத்தில் 1989 ஆம் ஆண்டு 6.54 வீதமாகவும், 1994 ஆம் ஆண்டில் 5.33 வீதமாகவும், 2000 ஆம் ஆண்டில் 4 வீதமாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் ஆண்டு சிறப்பிதழ்



# தகவல் ஒரு "அபின்"



**19** ஆம் நூற்றாண்டில், கார்ல் மார்க்ஸ் மதம் ஒரு அபின் என்றார். 20 ஆம் நூற்றாண்டில், ஹேபர்ட்மக்யூஸ் நுகர்வுப் பண்டங்களே அபின் என்றார். ஆனால் இந்த நூற்றாண்டில், இப்பொழுது இன்ரநெற் தனது 30 ஆவது வயதைக் கடந்துவிட்ட ஒரு காலச்சூழலில் தகவலே ஒரு அபினாக மாறி வருகிறது.




தகவல் தொழில்நுட்ப அகராதிகள் தரும் அர்த்தத்தின்படி தகவல் என்றால் - ஒழுங்கமைக்கப்பட்ட தரவுகள் என்று பொருள், இதில் தரவு (Fact) எனப்படுவது மெய்விபரம் என்று கூறப்படுகிறது. அது ஒப்பீட்டளவில் தூய்மையானது, உண்மையானது ஆனால் தகவல் எனப்படுவது ஏதோ ஒரு நோக்கத்தோடு தரவுகளை ஒழுங்கமைக்கும்போது உருவாகிறது. எனவே அந்த ஒழுங்குக்கேற்ப தரவுகள் உடைக்கப்படும் அல்லது சிதைக்கப்படும் அல்லது திரிக்கப்படும் அல்லது மிகைப்படுத்தப்படும் வாய்ப்புக்கள் அதிகமுண்டு. எனவே, தகவல் எனப்படுவது தரவோடு ஒப்பிடுகையில் உண்மை குறைந்தது; தூய்மையற்றது; கலப்பானது; தணிக்கை செய்யப்பட்டது; சிதைக்கப்பட்டது என வெல்லாம் வியாக்கியானம் செய்யமுடியும்.

இதைப் பின்வரும் உதாரணத்தின் மூலம் சரியாக விளங்கிக்கொள்ளலாம். தரவு எனப்படுவது மரத்திலுள்ள பூவைப்போன்றது. அது இயல்பானது; கலப்பற்றது; அது அதுவாக இருப்பது. ஆனால் தகவல் எனப்படுவது ஏதோ ஒரு ஒழுங்கில் கோர்க்கப்பட்ட பூக்களாலான ஒரு மாலையைப் போன்றது. இதில் எந்தப் பூவை எங்கே வைப்பது எந்த இலைக்குப் பின் அல்லது எந்தப் பூவுக்குப் பின் அதைவைப்பது என்பதெல்லாம் மாலை கட்டுபவரின் தெரிவிலேயே தங்கியிருக்கிறது.

எனவே தகவல் உள்நோக்கம் உடையது. எல்லாத் தகவல்களின் பின்னாலும் யாராவது ஒரு கர்த்தா இருப்பார். எனவே அதை உருவாக்குவோரின் அபிலாசைகளுக்கேற்ப சிதைக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட அல்லது மிகைப்படுத்தப்பட்ட அல்லது ஒழுங்குமாறி அடுக்கப்பட்டதாலேயே அதன் கூர் மழுங்கிப்போன அல்லது சத்தை இழந்துவிட்ட மெய்விபரங்களின் சேர்க்கையே தகவல். இதன்படிகூறின் தகவல் யுகம் எனப்படுவது அதன் பிரயோகநிலையில் தகவலைத் தருவோரின் யுகமே. அதாவது, தகவல்களை உருவாக்குவோரின் யுகமே. இதை இன்னும் சரியாகச் சொன்னால் - தகவல்களை உருவாக்குபவர்கள் அந்தத் தகவல்களை எந்த உள்நோக்கத்தோடு உருவாக்குகிறார்களோ அந்த உள்நோக்கத்துக்கேற்ப வடிவமைக்கப்பட வேண்டிய ஒரு யுகமே. அதாவது, தகவல் யுகம் எனப்படுவதும் ஒரு தகவல்தான். பூகோளக் கிராமம் எனப்படுவதும் அப்படியொரு தகவல்தான்.

இந்தத் தகவல்களைத் தருவோர் நுகர்வோராகிய நாம் தகவலுக்கும், தரவுக்கும் இடையில் வேறுபாடு காணவியலாது மயங்கிக்கிடக்க வேண்டும் என்றே விரும்புகிறார்கள். தகவல்களால் போதையூட்டப்பட்டு மெய் எது பொய் எது என்று தெரியாது கொக்கக்கோலா மேனியா, வயக்ரா மேனியா ..... என்றெல்லாம் நாம் பித்துப் பிடித்தவர்கள் போலாகிவிட வேண்டும் என்றும் எதிர் பார்க்கிறார்கள். அவர்கள் படைக்கவிரும்பும் ஒரு உலகத்துக்காக எங்களை அவர்களுடைய அலைவரிசையில் சிந்திக்க வைக்கும் மனோவசிய வேலைகளை எம்மைச் சுற்றி சதா மொய்த்துக் கொண்டிருக்கும் தகவல்களே செய்கின்றன. இத்தகைய அர்த்தத்தில்தான் தகவலை ஒரு அபின் என்று சொல்ல வேண்டியுள்ளது.

இந்த அபினை அருந்திக் கிறங்கும் எவரும் வெள்ளைக்காரர்களின் தலைநகரங்களில் இருந்து பின்னப்படும் ஒரு உலக மகா வலைக்குட் சிக்கிய இரண்டுகால் பூச்சிகளாய் மாறிவிடுகிறார்கள்.

தொழில்நுட்ப வார்த்தைகளில் கூறின் - தகவல் தொழில்நுட்பம் எனப்படுவது மேற் கின் கண்டுபிடிப்பே என்பதால், பெருமளவு தகவல்களைத் தருவோராக அவர்களே காணப்படுகிறார்கள். அதாவது மேற்கு நாடுகளின் நோக்குநிலையிலிருந்து அவர்களுடைய விருப்பு வெறுப்புக்கேற்ப வடிவமைக்கப்பட வேண்டிய ஒரு யுகத்தையே நாம் தகவல் யுகம் என்கிறோம்.

ஒரு காலம் கடலை ஆள்பவனே உலகையும் ஆண்டான். இன்று தகவல்களை ஆள்பவனே உலகை ஆள்பவனுமாகிறான். முன்னைய காலங்களில் எங்கேயாவது ஏதாவது ஒரு வளத்தைச் சுரண்டுவதாயிருந்தால் அந்த இடத்துக்குப் படையெடுத்துச் சென்று நிலத்தைப் பிடித்து முரட்டுத்தனமாகச் சுரண்டல் செய்யப்பட்டது. ஆனால் இப்பொழுதோ படைகள் நகர்வதற்குப் பதிலாக T.N.C எனப்படும் ரான்ஸ் நஷனல் கோப்பிரட்டிவ் நகர்கின்றன. இந்த நகர்வுகளுக்குத் தேவையான உளவியல் மற்றும் பௌதிக வலைப்பின்னலைத் தகவல்களே ஏற்படுத்திக் கொடுக்கின்றன. தகவல்களைப் பரிமாறுவதன் மூலமே வர்த்தகம் நடக்கிறது, வளங்கள் கைமாறுகின்றன, வளங்கள் சுரண்டப்படுகின்றன.

> **இன்ரநெற் எனப்படுவது உலகு பூராகவும் பரந்துவருகின்ற, அரசன் இல்லாத ஒரு இலத்திரன் பேரரசு. ஒருமைய அதிகாரம் இல்லாத ஒரு அமைப்பாக இது உருவாகக் காரணமே அப்படியொரு மைய அதிகாரம் இருக்கும் பட்சத்தில் எதிரிகள் அந்த மையத்தைத் தாக்கினால் முழுக் கட்டமைப்புமே சரிந்துவிடும் என்ற அச்சமும் அதோடு ஊடுருவிகளி டமிருந்து ரகசியங்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற முன்னெச் சரிக்கையும்தான்.**

இப் புதிய படையெடுப்புக்குரிய உட்கட்டுமாணத்தைத் தகவல்களே உருவாக்கித் தருகின்றன. அப்படித் தகவல்களால் முடியாது போகும்போதுதான் ஆப்கானிலும், ஈராக்கிலும் நிகழ்வதுபோல படைகள் நேரடியாக அரங்கினுட் பிரவேசிக்கின்றன.

இப்பொழுதுள்ள உலகின் மொத்தப் பொருளாதாரத்தில் 51 விகிதத்துக்கும் அதிகமானது T.N.C களிடமும்தான் இருப்பதாகக் கூறப்படுகிறது. 49 விகிதத்துக்கும் குறைவாகவே அரசுகளிடம் இருப்பதாகக் கூறப்படுகிறது. தற்சமயம் நிலவும் எரிபொருள் விலை உயர்வுக்குரிய பிரதான காரணம், எண்ணெய் சுத்திகரிப்பு, சேமிப்பு, சந்தைப்படுத்தல் போன்றவற்றைத் தமது பிடிக்குள் வைத்திருக்கும் ஆறு T.N.C க்களே என்று கூறப்படுகிறது. இது விசயத்தில் ஒபெக் நாடுகள் பெருமளவுக்குக் கையாலாகாதவைகள் போலக் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

எனவே, இந்தப் பூமியை T.N.C க்கள் மற்றும் பலசாலிகளான சில பணக்கார நாடுகள் என்பவற்றுக்கிடையில் பங்கிடுவதற்கு வசதியாக அதை ஒரு கிராமமாகச் சுருக்கிவிட வேண்டும். என்ற ஒரு மேற்கத்தேயக் கனவின் மறுபெயரே தகவல் யுகம் எனப்படும் ஒரு ஆகப்பெரிய தகவலாகும்.

இந்த நிலையில் போராடும் இனமாகிய தமிழர்களும் தமிழர்களைப் போன்ற ஏனைய ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளும் சிறிய இனங்களும் எம்மைச் சூழ்ந்து வரும் இந்த மகா மாயவலைக்குள் ளிருந்து தப்புவது எப்படி?

எம்மை நோக்கிப் பெருகிவரும் தகவல் வெள்ளத்துள் மூழ்கிப்போகாமலும், அள்ளுண்டு போகாமலும் தப்புவது எப்படி?

தகவலைப் பிழிந்து தரவுகளைத் தனித்தெடுத்து உண்மையை தரிசிப்பது எப்படி?

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் மெய்ப்பொருளைக் கண்டுபிடிப்பது எப்படி?

அப்படி மெய்ப்பொருளைக் கண்டுபிடிக்கத்தான் முடியுமா? அதுவும் சிறிய வளங்குறைந்த போராடும் இனமாகிய நாம் தகவல்களிலிருந்து தரவுகளை விடுதலைசெய்ய முடியுமா?

முடியும்.

அதற்குத் தேவை ஒரு ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள் வாங்கத் தேவையான அளவு தொகைக் காசே. அதாவது, இன்ரநெற் இணைப்புடன்கூடிய ஒரு கொம்பியூட்டர் எம்மிடம் இருக்குமானால் எம்மாலும் அது முடியும். எப்படி?

> **எந்த ஒரு பலமான அமைப்பும் அதன் வேரிலேயே அதன் அழிவின் விதைகளைக் கொண்டிருக்கும். தகவல் யுகமும் அப்படித் தான். தகவல் யுகத்தின் அடித்தளம் இன்ர நெற்றே. ஒரு புறம் இன்ரநெற் மேற்கு நாடு களின் சேவகனாய் உள்ளது. ஆனால், இன்னொருபுறம் அது அறிவை முன்னெப் பொழுதையும்விட வேகவேகமாக விடுதலை செய்தும் வருகிறது. அறிவு விடுதலை செய்யப்பட்டுவரும் இந்த அம்சமே எமக்கு மிகவும் வாய்ப்பானது.**

எந்த ஒரு பலமான அமைப்பும் அதன் வேரிலேயே அதன் அழிவின் விதைகளைக் கொண்டிருக்கும். தகவல் யுகமும் அப்படித் தான். தகவல் யுகத்தின் அடித்தளம் இன்ரநெற்றே. ஒரு புறம் இன்ரநெற் மேற்கு நாடுகளின் சேவகனாய் உள்ளது. ஆனால், இன்னொருபுறம் அது அறிவை முன்னெப் பொழுதையும்விட வேகவேகமாக விடுதலை செய்தும் வருகிறது. அறிவு விடுதலை செய்யப்பட்டுவரும் இந்த அம்சமே எமக்கு மிகவும் வாய்ப்பானது. இதைச் சிறிது விரிவாகப் பார்ப்போம்.

உலகில் இதுவரை தோன்றிய எந்த ஒரு

**நிலாந்தன்**

வலைப்பின்னலை விடவும் இன்ரநெற் சுயாதீனமானது, சுதந்திரமானது, ஜனநாயகமானது. இன்ரநெற் எனப்படுவது உலகு பூராகவும் பரந்துவருகின்ற, அரசன் இல்லாத ஒரு இலத்திரன் பேரரசு. ஒரு மைய அதிகாரம் இல்லாத ஒரு அமைப்பாக இது உருவாகக் காரணமே அப்படியொரு மைய அதிகாரம் இருக்கும் பட்சத்தில் எதிரிகள் அந்த மையத்தைத் தாக்கினால் முழுக் கட்டமைப்புமே சரிந்துவிடும் என்ற அச்சமும் அதோடு ஊடுருவிகளிடமிருந்து ரகசியங்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற முன்னெச்சரிக்கையும்தான்.

இதன்படி ஒவ்வொரு பகுதியும் விரும்பி மேற்கொள்ளும் இடைத் தொடர்புகளால் உருவாகும் ஓர் இலத்திரன் வலையமைப்பு உலகு முழுதையும் மூடி பரந்து ஒரு உலக மகா வலையாக வளர்ந்து வருகிறது. தலைவர் இல்லாத; மைய அதிகாரம் இல்லாத இந்த மகா சுதந்திரமான அமைப்பு மனித குலத்தின் அறிவனைத்தையும் எமது விரல் நுனிகளுக்குக் கொண்டுவந்திருப்பது மட்டும் அல்ல, அது அறிவை முன்னெப்பொழுதையும் விடப் பிரமிக்கத்தக்க அளவில் விடுதலை செய்தும் வருகிறது.

அறிவு எனப்படுவது ஆதியான காலமிருந்து மறுமலர்ச்சிக் காலம்வரையிலும் பின் மறுமலர்ச்சியிலிருந்து தொடங்கிக் கைத்தொழில் புரட்சி வரையிலும் பின் கைத்தொழில் புரட்சியிலிருந்து சிலிக்கன் புரட்சி வரையிலும் அதிகாரத்தின் கருவியாகவே இருந்து வந்துள்ளது.

அறிவை அதிகாரத்தின் பிடியில் இருந்து விடுவித்து அறிவுக்கே அதிகாரத்தைக் கொடுக்கும் கோட்பாட்டுக்குக் கிட்டவாக கார்ல் மார்க்ஸ் வந்தார். ஆனால் துரதிஷ்டவசமாகக் கடந்த நூற்றாண்டில் மார்க்கிசம் பரிசோதிக்கப்பட்ட, இடங்களில் எல்லாம் அது அறிவின் ஆட்சியாக அல்லது மாறாக, பொலிஸ் ஆட்சியாக அல்ல அதிகார வர்க்கத்தின் ஆட்சியாகவே வந்து முடிந்தது.

இந்த நிலையில், அறிவை அதிகாரமுடையதாக ஆக்கியதோ இல்லையோ இன்ரநெற் அதை முன்னெப்பொழுதையும்விட பரந்தகன்ற தளத்தில் விடுதலை செய்துவிட்டது. மனித குலத்தின் வரலாற்றில் அறிவு முன்னெப்பொழுதும் இந்தளவுக்கு விடுதலை செய்யப்பட்டதில்லை.

எனவே, இன்ரநெற் ஒருபுறம் அதிகாரத்தின் கருவியாக மாறி தகவல் யுகத்தின் அடித்தளமாகக் காணப்படுகிறது. இன்னொருபுறம் அது அறிவை முன்னெப் பொழுதையும்விட விசாலமான மிகப் பரந்த அளவில் விடுதலை செய்தும் வருகின்றது. அதை யாரும் பயன்படுத்தலாம், எதற்கும் பயன்படுத்தலாம், நல்லதுக்கும் பயன்படுத்தலாம், கெட்டதுக்கும் பயன்படுத்தலாம்.

தகவல் யுகம் எனப்படுவது அதன் பிரயோக நிலையில் இன்றுவரை மேற்கு நாடுகளின் விருப்பப்படி முழு உலகையும் வடிவமைப்பதற்கே உதவி வந்திருக்கின்றது. இதன்படி இன்ரநெற்றும் மேற்கு நாடுகளின் சேவகனாகவே இருந்து வருகிறது.

ஆனால், அது அதன் இயல்பில் சுயாதீனமானது, சுதந்திரமானது, ஜனநாயகமானது, பலமும் வளமும் உடையது. மேற்கு நாடுகள் அதன் சுயாதீன்மான இயல்பையும், சுதந்திரமான வலையமைப்பையும் தமக்கு வசதியாகச் சுரண்டி வருகின்றன. மாறாக, நீதிமானும், புத்திமானுமாகிய ஒருவன் அதைத் தனக்குச் சேவகம் செய்ய வைப்பவனாயிருந்தால் அவனால் தகவலைப் பிழிந்து தரவுகளை விடுதலை செய்யமுடியும். அறிவை அதிகாரமுடையதாக்கி, இந்தப் பூமியிலே முன்பு பிளாட்டோ கனவு கண்டதுபோல ஞானிகளின் ஆட்சியை ஏற்படுத்த முடியும்.

முன்பு ஒரு காலம் மனிதகுலம் தனது சக்தித் தேவைகளுக்காக நிலக்கரியிலும், நீராவியிலும் தங்கியிருந்தது. பிறகது நிலக்கீழ் எண்ணையில் தங்கியிருக்கலாயிற்று. இனிவரும் காலங்களில் அத மூளைச் சக்தியில் அதாவது, சிந்தனா சக்தியில் தங்கியிருக்கும் ஒரு நிலை தோன்றும் என்று அறிஞர்கள் எதிர்வு கூறத் தொடங்கிவிட்டார்கள்.

எனவே இனிப் புத்திமானே பலவான்.

**அறிவே சக்தி**
**அறிவே பலம்**
**அறிவே ஆயுதம்**
**அறிவே எல்லாம்.**

*

## டிஜிற்றல் நூலகம்

நூலகம் என்றால் அங்கே நிறைய அலுமாரிகளில் தடிமனான நூல்கள் அடுக்கப்பட்டிருக்கும். ஆனால், இந்த நூலகத்தில் அலுமாரி இல்லை. நூல்கள் இல்லை. உங்கள் கணிப்பொறியின் திரைக்குள் இயங்கும் மாய நூலகம் இது.

டிஜிற்றல் நூலகம் என்பது என்ன?

நூல்களையெல்லாம் கணினியில் ஏற்றுவது. பிறகு அதை வெப்சைட்டில் சேமிப்பது. அதன் பிறகு, உலகத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் யாரும் அதைப்படிக்கலாம். நண்பர்களுக்கு அந்தப் பக்கங்களை மின்னஞ்சல் வழியாக அனுப்பி வைக்கலாம். ஒரே சமயத்தில் எத்தனை பேர் வேண்டுமானாலும், அந்த நூலைப் பார்க்கலாம். இதனால், அந்த மூலப்பிரதி எந்த விதத்திலும் அழியாது; குறையாது; கிழியாது; ஓரங்கள் மடங்காது; குறிப்பிட்ட பக்கங்களை மட்டும் கிழித்துக் கொண்டு போக முடியாது. இவற்றுக்கு எல்லாம் மேலாக எந்த அரசியல் சக்திகளோ, இனக் குழுவின்றோ, டிஜிற்றல் நூலகத்தை எரித்து, அழிக்க முடியாது. பண்டைய இலக்கியத்திலிருந்து நவீன எழுத்துவரை எல்லாவற்றையும் இதில் பாதுகாக்கலாம். ☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் ஆண்டு சிறப்பிதழ்

# யாழ்ப்பாணத்தவரின் நம்பிக்கையும் நடைமுறையும்

தா. சனாதனன்

**யாழ்ப்பாணத்தவரிடையே 'நுண்கலைகள்' அவற்றின் அனுபவத்திற்காகவும், வெளிப்பாட்டிற்காகவும் பயிற்றப்படுவதோ, பயிலப்படுவதோ, அனுபவிக்கப்படுவதோ இல்லை என்ற உண்மை புலப்படும். அவை எமது சமூகத்தில் இன, தேசிய, பண்பாட்டு அடையாளங்களினதும், சமூக அந்தஸ்தின், அதிகாரத்தின் குறிப்பான்களாகவே நோக்கப்படுவது தெளிவாகும்.**

### 1. நடைமுறை

1970 ஆம் ஆண்டுகளில் அதிகரித்த அளவில் யாழ்ப்பாணத்து நகர, உயர் நடுத்தரவர்க்கத்திடம் காணப்பட்ட கர்நாடக சங்கீதத்தையும், பரத நாட்டியத்தினையும் கற்க முயலும், அரங்கேற்றம் செய்ய விரும்பும் போக்கானது இன்று புலம்பெயர் தமிழர்களையும் ஆக்கிரமித்துள்ளது. இது பல தென்னிந்திய நடன, சங்கீத ஆசிரியர்களை தொழில் நிமித்தம் இந்த நாடுகளை நோக்கி புலம் பெயரச் செய்யுமளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில், ஈழத் தமிழ்க் குடும்பங்களுடன் சில மாதங்களைக் கழிக்க நேர்ந்த தமிழக ஓவியர் ஒருவர், தமிழ்நாட்டுடன் ஒப்பிட முடியாதளவிற்கு ஈழத்தமிழரிடம் பரவியுள்ள கர்நாடக சங்கீதத்தினையும் பரதத்தையும் கற்றுக்கொள்ளும் விசித்திர ஆர்வத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றார். (தமிழ் நாட்டில் பிராமணர் அல்லாதவர்களிடம் இந்தப் போக்கு அதிகம் காணப்படுவதில்லை) தமிழ் தெரியாத அல்லது தெரிந்துகொள்ள ஊக்குவிக்கப்படாத குழந்தைகள் கூட, இந்தக் கலைப் பாடங்களைக் கற்றுக் கொள்ள அவர்களின் பெற்றோர்களால் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதில் உள்ள விசித்திரம் என்னவென்றால், அநேகமான பெற்றோர்களுக்கு எதிர்காலத்தில் தமது பிள்ளைகள் கலைஞர்களாக வருவது பற்றியோ அல்லது இந்தக் கலையைத் தொழில் முறையாகப் பயில்வது பற்றியோ எந்த்வித விருபபமும் கிடையாது என்பதுதான். இதைப புலம் பெயர் நாடுகளில் தமது அடையாளப் பேணுகையாக பெரும்பாலானவர்கள் கருதுவார்களேயானால், இவற்றைத் தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களாக இவர்கள் நம்பக் காரணம் யாது? இந்த நம்பிக்கை எந்தக் காரணிகளால் வடிவமைக்கப்படுகின்றது, இந்தப் போக்கு ஏன் ஓவியம், சிற்பம், நாடகம், கட்டடம் போன்ற துறைகள் சார்ந்து நிகழவில்லை?... கலையார்வம்தான் காரணம் என்றால், மற்றைய இசை வடிவங்களையும், ஆற்றுகை வடிவங்களையும் கற்கும் வாய்ப்பு குடிபெயர்ந்த நாடுகளில் இருந்தும் அவற்றை விட்டு, ஏன் கர்நாடக சங்கீதத்தையும் பரத நாட்டியத்தினையுமே இவர்கள் தேடுகின்றார்கள்? போன்ற கேள்விகள் ஓவிய நண்பரின் அவதானங்களில் இருந்து மேற்கிளம்பின.




இந்த அவதானங்களும் கேள்விகளும் புலம்பெயர் சமூகத்திற்கு மட்டுமல்லாமல், இன்றைய யாழ்ப்பாணக் கலை நடைமுறைகளுடனும் பொருந்திப் போகின்றன. சமாதான உடன்படிக்கைக்கு பிற்பட்ட காலப் பகுதியில் பழைய வீரசிங்க மண்டப அரங்கேற்றங்களை ஞாபகமூட்டும் பல நிகழ்ச்சிகள அதிகரித்து வருகின்றன. புலம் பெயர்ந்தவர்கள் அரங்கேற்றம் செய்ய யாழ்ப்பாணம் வருதலும் இந்தியக் கலைஞர்கள் இந்த நிகழ்வுகளுக்கு அதிதிகளாக வருதல் என்பதும் இன்று தோன்றியுள்ள புதிய நடைமுறைகளாகும். அத்துடன் வெளியூர் அரங்கேற்றங்களைச் சிறப்பிக்க, உள்ளூர் கலைஞர்களும், ஆசிரியர்களும் செல்லுதல் என்பதும் அதிகரித்துள்ளது. பெருந்தொகையான பண முதலீட்டுடன், சமூக பிரபலங்களுடனும், உறவினர், நண்பர் கூட்டத்துடனும் நிகழும் இந் நிகழ்வுகளுக்குப் பின்னால் இருப்பது கலையார்வம் தான் என்று வாதிடல் கடினமான தொன்று. இவை புதிய குடும்ப சடங்குகளாக உருவெடுத்துள்ளன.

இந்த நடைமுறைகளுக்கு வெளியே கர்நாடக சங்கீதத்தையும் பரதத்தையும், பிரத்தியேகமாகவும், பள்ளிக்கூடங்களிலும், பல்கலைக்கழக மட்டத்திலும் கற்போரின் எண்ணிக்கை நம்பமுடியாத அளவிற்கு அதிகரித்துள்ளது. இருந்தும் இவ்வளவுகால கற்றல் - கற்பித்தல் வரலாற்றில் எத்தனை தொழில் முறைக் கலைஞர்கள் அறியப்பட்டுள்ளார்கள் என்ற கேள்வி தொடர்ந்தும் கேட்கப்படுகின்றது. இவ்வளவு கிராக்கி பயிற்சி பெறுவதில் இருந்தாலும் தரமான இசைக்கச்சேரிகளிலும், நாட்டிய நிகழ்ச்சிகளிலும் இரசிகர்களின் எண்ணிக்கை குறிப்பிடும்படியானதாகவோ, தொடர்ச்சியானதொன்றாகவோ இல்லை. இந்த இரு வேறான எதிர் எதிரான நடைமுறைக்குக் காரணம் என்ன? கலைப் பயிற்சியின் போது கர்நாடக இசையையும் பரத நாட்டியத்தையும் 'நுண்கலைகள்' என்றும் அவற்றை 'இறைவனே அனுக்கிரகம் செய்தார்' என்றும் அவை "தெய்வீக கலைகள்" 'ஆத்மீகம்' சார்ந்தவை என்றும் 'தமிழ் மரபு' வெளிப்பாடு என்றும், நம்பும் ஆசிரியர்களும், மாணவர்களும் பெற்றோர்களும் ஏன் அவற்றை பயில்வு செய்ய முயற்சி எடுப்பதில்லை? இந்த நம்பிக்கைக்கும் நடை முறைக்குமான குழப்பத்தை எவை கட்டியமைக்கின்றன. இந்த முரண்பாட்டை யாழ்ப்பாணிகள் எவ்வாறு சமன் செய்து கொள்கிறார்கள்?

இந்தக் கலை வடிவங்களை கற்பவர்களும் கற்பிப்பவர்களும் கலைஞர்களாக நோக்கப்படுவதுடன் வட இலங்கை சங்கீத சபையின் இறுதித் தரத்தில் சித்தியடையும் மாணவர்களுக்கு 'கலா வித்தகர்' என்ற பட்டமும் வழங்கப்படுகிறது. இவற்றுக்கெல்லாம் மேலே இந்தியாவைப் போல முழு நேரக்கலைஞர்களோ அதை ஒட்டிய செயற்பாடுகளோ அற்ற தெளிவான யதார்த்தத்திற்கு அப்பால் இந்தியக் கலைஞர்களிலும் நாம் அதிகம் கற்றவர்கள், உசத்தியானவர்கள் என்ற மனோபாவமும் எம்மிடம் காணப்படுகிறது. இந்த மனோபாவத்திற்கான அடிப்படைகள் எவை?

இந்தக் கேள்விகளுக்கான விடைகளின் சமூக பின்புலத்தை அறிந்து கொள்ளும் போது யாழ்ப்பாணத்தவரிடையே 'நுண்கலைகள்' அவற்றின் அனுபவத்திற்காகவும், வெளிப்பாட்டிற்காகவும் பயிற்றப்படுவதோ, பயிலப்படுவதோ, அனுபவிக்கப்படுவதோ இல்லை என்ற உண்மை புலப்படும். அவை எமது சமூகத்தில் இன, தேசிய, பண்பாட்டு அடையாளங்களினதும், சமூக அந்தஸ்தின், அதிகாரத்தின் குறிப்பான்களாகவே நோக்கப்படுவது தெளிவாகும்.

### 2. யாழ்ப்பாணத்தவரிடையில் 'நுண்கலை' என்ற நம்பிக்கை.

எமது பாரம்பரிய சமூகங்களில் கலை, கைவினை என்ற பாகுபாடோ, நுண்கலை (**Fine Arts**) பயன்பாட்டுக் கலை (**Functional Art**) என்ற பிரிப்போ, உயர் கலை (**High Art**) தாழ்கலை (**Low Art**) என்ற பிரிப்புகளோ காணப்படவில்லை. கலை, கைவினை என்ற பிரிப்பு முதன் முதலில் ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலத்தில் கலைப்பட்டைகளில் இருந்து தனிமனித படைப்பாளிகளை வேறுபடுத்த பயன்படுத்தப்பட்டது. இது கலை வெளிப்பாட்டை ஓர் மேதையின் ஆத்மீக அழகியல் வெளிப்பாடாகவும் கைவினையை நாளாந்த உபயோகப் பொருட்கள் சம்பந்தப்பட்ட ஒன்றாகவும் வரையறை செய்தது. இதன் பின்னர் 18ஆம் நூற்றாண்டில்தான் நுண்கலை என்ற பதம் பயன்பாட்டிற்கு வந்தது. இது அழகியல் வெளிபபடை மட்டுமே நோக்கமாகக் கொண்டு, சமூகத்தின் உயர் வகுப்பினருக்காகப் படைக்கப்படும் உயர் கலைப்பொருட்களை குறித்தே பயன்படுத்தப்பட்டது. இதனுள் முன்னைய கலைபற்றிய வரையறுப்புக்களும் உள்வாங்கப்பட்டன. தொடக்கத்தில் சிற்பம், ஓவியம், இசை, கவிதை என்பனவே நுண்கலைகளாகக் கொள்ளப்பட்டன. எனினும் பின்னர் கட்டமும் இணைத்துக் கொள்ளப் பட்டது. ஆனால் இந்தப் பதப்பிரயோகம் 19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் கடும் விமர்சனத்திற்குள்ளாகியதுடன் அது கட்டியமைத்த வர்க்க, வர்ண இரசனையை ஒட்டிய அடுக்கமைவும் மேலாண்மையும் கேள்விக்குள்ளாக்கப்பட்டன. இன்று நுண்கலை என்ற பதம், ஓவியம், சிற்பம், கட்டடம் என்ற காண்பியக் கலைகளைக் குறிக்கும் இன்னொரு பதமாகவே பயன்படுத்தப்படுகின்றது. உலக பல்கலைக்கழகங்களில் நுண்கலைமாணிப்பட்டம் (**BFA**) காண்பிய கலையில் பயிற்சி பெறுவோருக்கே வழங்கப்படுகின்றன. இந்தியாவிலும் லலித கலைகளைக் குறிக்கவே இன்று நுண்கலை என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் யாழ்ப்பாணத்தில் நுண்கலை என்றால் அது சங்கீதம் அல்லது நடனம் என்ற வெகுசன நம்பிக்கையே காணப்படுகிறது. அத்துடன் அவை உயர்ந்தவை, தெய்வீகமானவை போனற மேலாண்மை சார்ந்த கருத்தியல்களுடனும் சம்பந்தப்பட்டவையாக விளங்குகின்றன.

நுண்கலை என்ற பதப்பிரயோகமும் அதனுடன் ஒட்டிய பாகுபாடும், அதன் பண்பாட்டு அரசியலும் எமக்கு காலனீயத்துடன்தான் அறிமுகமாயின. இந்த அறிமுகத்துடன் காலனித்துவ வாதிகளுக்கு பரிச்சயமற்ற சுதேசிய கலை முயற்சிகளும், ஊடகங்களும் கைவினைகளாகவும் கீழ் நிலைக் கலைகளாகவுமே நோக்கப்பட்டன. இந்த சிந்தனையை வளர்ப்பதாகவே காலனிய கல்வியும் அமைந்தது. இந்தியத்துணைக் கண்டத்தில் காலனீயத்திற்கும் மேனாட்டு வாதத்திற்கும் எதிராக தேசியவாதமும், கீழைத்தேய மரபு வாதமும் மேற்கிளம்பிய போது, அவை மேலைத்தேய அடையாளத்திற்கு நிகராக சுதேசிய அடையாளத்தைக் கட்டியமைக்க முயன்றன. இந்த அடையாளம் பற்றிய தேடலில் நுண்கலைகள் பற்றிய தேடலும் செயற்பாடுகளும் முக்கியமானவை. ஏற்கனவே காண்பியக் கலைப்பயிற்சியிலும் பயிலவிலும் ஆங்கிலேயப் பள்ளிகள் முளைத்திருந்த நிலையில் எமது நுண்கலை பற்றிய தேடல் ஒப்பீட்டளவில் மேலைத்தேய காப்பு குறைந்த இசை நடன, வடிவங்கள் பற்றியனவாகவே அமைந்தன. பரத நாட்டியத்தின் தோற்றமும், கர்நாடக சங்கீதத்தின் நவீனப்படுத்தல்களும் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டே நோக்கப்பட வேண்டும். சாதி மையப்பட்டிருந்த பாரம்பரீய கலை வடிவங்களை பிராமணர்கள், மறுவுருவாக்கிக் கொண்டபோது அவற்றின் அடையாளத்தை மாற்ற அவற்றுக்கு தெய்வீக உற்பத்தி சார்ந்த நுண்கலைகள் என்ற கற்பிதத்தை உருவாக்கினார்கள். இதே காலப்பகுதியில் சுவாமி விவேகானந்தர், சுவாமி அரவிந்தர், ஆனந்தக்குமாரசாமி என்போர் இந்திய கலைகளின் மத பின்னணியை எடுத்துக்காட்டி அவற்றை அபௌதிக (**Meta Physical**) பண்பு கொண்டனவாக கட்டியமைத்தனர். இது தான் நுண்கலைகளை தெய்வீகமானவை என்று நம்ப காரணமாய் அமைந்தது எனலாம். எனவே காலனீய சுதேசிய முரண்பாட்டில் மேலைத்தேய சார்பு கருத்துக்களால் வடிவமைக்கப்பட்ட 'நுண்கலை' என்ற பதம் அபௌதீக பண்பையும் தன்னுள் ஏற்று அதை சுதேசிய அடையாளமாகவும் கற்பித்துக் கொண்டது. இதன்போது எமது கிராமிய வெளிப்பாடுகளும் அடிவர்க்கத்தினரது வெளிப்பாடுகளும் எமது மரபு வாதிகளாலும், தேசியவாதிகளாலும் கவனியாது கைநழுவவிடப்பட்டன.

### 3. யாழ்ப்பாணத்தில் நுண்கலையின் தாபிப்பு

யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலரின் கலை எதிர்ப்புப் பிரச்சாரங்களின் பின்னர் நுண்கலைகள் பற்றிய முயற்சி இந்தியாவில் நிகழ்ந்து வந்த மாற்றங்களின் செல்வாக்கினால் நிகழ்ந்ததொன்று. அந்த வகையில் கலைப்புலவர் நவரட்ணமும் அவரது மனைவியும் முக்கியமானவர்கள். இவர்கள் உருவாக்கிய கலாநிலையத்தில்தான் (1930 ஆம் ஆண்டு) முதலாவது கர்நாடக இசைக் கச்சேரி நடைபெற்றதாக சொல்லப்படுகிறது. கலைப்புலவர் நவரட்ணம் சுதேசிய காண்பியக் கலைகள் குறித்து அதிகம் எழுதியிருந்தாலும் பயில்வு என்ற மட்டத்தில் கலாநிலையத்தின் செயற்பாடு இசை குறித்தே அமைந்தது. இதே கால கட்டத்தில் (1931 ஆம் ஆண்டு) வட இலங்கை சங்கீத சபையும் உருவானது. இதனைத் தொடர்ந்து சைவ தமிழ் உயர்வகுப்பு பெண்களின் நவீன, பண்பாட்டு நாடகத்தை வடி வமைக்க இராமநாதன் அவர்களால் உருவான இராமநாதன் கல்லூரியில் 1940 ஆம் ஆண்டு இசையும் இந்திய ஆசிரியர்களால் கற்பிக்கப்படுதல் ஆரம்பமானது. இது இதனைத் தொடர்ந்த காலப்பகுதியில் இசையை தையலைப் போல உயர்குலக் குடும்பப் பெண்களின் அடையாளமாக, [illegible] மாறியது. எவ்வாறு ஆறுமுக நாவலரின் சற்சூத்திரப் பிரிப்பானது பிராமணருக்கு நிகரான அந்தஸ்த்தை யாழ்ப்பாணத்து வேளாளருக்கு வழங்கியதோ, அப்படி இசை கற்றல் என்பது பிராமணப் பெண்களுக்கு நிகரான அடையாளத்தை வேளாளப் பெண்களுக்கு வழங்கியது. பரதம் இதைத்தொடர்ந்த காலப்பகுதியிலேயே அறிமுகமாகியது என்பதுடன் ஏற்கனவே சின்னமேளம், சதிர் பற்றி இருந்த மனப்பதிவுகள் அது பற்றிய தயக்கத்திற்கு காரணமாகலாம். 1960 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இராமநாதன் இசைக்கல்லூரி 1974 ஆம் ஆண்டில் யாழ்.பல்கலைக்கழகத்தால் நுண்கலைக் கழகமாக மாற்றம் கண்டது.

இந்த அடையாள உருவாக்கத்துடன் சம்பந்தப்பட்ட கலைக் கல்வியானது இலவசக் கல்வி மூலமாகவும் பல்கலைக்கழக கல்வி மூலமாகவும் மேலும் பரவலாக்கப்பட்டது. இதனூடு பல்கலைக்கழகப் பட்டம், அரச உத்தியோகம் என்ற அதிகார அந்தஸ்து கட்டமைப்புச் சார்ந்த எண்ணத்தை நுண்கலை என்ற பதம் பெற்றுக் கொண்டது. மொத்தத்தில் பரவலாக்கப்பட்ட நுண்கலைக் கல்வியானது முன்னைய சாதிய அடையாளத்திற்கு பதில் ஓர் வர்க்க (நடுத்தரவர்க்க) அடையாளமாக 'நுண்கலை'யை மாற்றியுள்ளது கண்கூடு.

### முடிவுரை

மேற்சொன்ன அவதானிப்புக்களிலிருந்து யாழ்ப்பாணத்தவரிடையில் கர்நாடக இசையும், நடனமுமே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நுண்கலைகளாக நோக்கப்படுகின்றன. இவை பற்றிய எண்ணங்களை காலனித் துவமும் தேசிய வாதமும், அதைத்தொடர்ந்து இலவசக்கல்வியும் பல்கலைக்கழகபட்டமும், இதை ஒட்டிய வேலை வாய்ப்பும் கட்டியமைத்துள்ளன. இந்த வரலாறு சிற்பம், ஓவியம் போன்ற துறைகளுக்கு யாழ்ப்பாணத்தில் காணப்படாததால் அவை கர்நாடக சங்கீதத்தையும், நடனத்தையும் போல நடுத்தர வர்க்கத்தால் பயின்றுகொள்ளப்படுவதில்லை.

தொடக்கத்தில் உயர் சாதி, உயர் வர்க்கத்தின் அடையாள அந்தஸ்தின் குறியீடாக காணப்பட்ட இவை, இலவச கல்வியினூடும் குருகுலக் கலைப்பயில்வில் அதன் கலையீட்டினூடும் சாதி, எல்லைகளைக் கடக்க வழி ஏற்படுத்தப்பட்டது. அந்த வகையில் இன்று மேல்வர்க்கமாக தன்னைக் காட்டிக்கொள்ள விரும்பும் நடுத்தர வர்க்க அடையாளமாக மாறியுள்ளது. இந் நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ளேயும், வெளியேயும் உருவாகும் ஈழத்தமிழ் நடுத்தர வர்க்கத்தின் சுட்டியாக காணப்படுகிறது.

புலம்பெயர் சூழலில் அவர்கள் எதிர் நோக்கும் பண்பாட்டு ரீதியான அடையாளச் சிக்கலில் இருந்து வெளிவர ஓர் இலகு வழியாக 'நுண்கலைகள்' பற்றிய செயற்பாடுகள் மாறியுள்ளன.

புலம்பெயர்ந்தவர்களின் நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதும், உள்ளூர் அரங்கேற்றங்களுக்கு இந்தியக் கலைஞர்கள் வரவழைக்கப்படுவதும் இந்த வகுப்பு சார் அசைவியக்கத்தினுள் மேலதிக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஓர் முயற்சியாகக் கருதப்படலாம்.

இதனால் இந்த அடையாளத்தினுள் ஓர் அடுக்கமைவும் கொண்டு வரப்படுகின்றது. இந்த நுண்கலை பற்றிய செயற்பாடுகளில் குறித்த நபரின் அல்லது அவர் சார்ந்த குடும்பத்தின் சமூக ரீதியிலான கீர்த்தியும் செல்வாக்கும் அதிகரித்துக் கொள்ளப்படுகிறது.

எமது ஆர்வம் தமிழகத்திலுள்ள நுண்கலை பற்றிய நிலவரத்துடன் ஒப்பிட்டாலும் இரண்டிலும் அடிப்படை வேறுபாடு ஒன்று தென்படுவதை அவதானிக்க முடிகிறது. தமிழ் நாட்டில் இந்தக் கலைவடிவங்களைப் பயில்வது அல்லது ஆற்றுகை மூலம் அடையாளம் உருவாக ஈழத்தில் இவற்றைப் பயிற்சி பெறல், பட்டம் பெறல், ஆசிரியர் தொழில் செய்தல் என்பவற்றுடன் அது சம்பந்தப்படுகின்றது. இந்த நிலையில் கலை வெளிப்பாடு, அதுதரும் அனுபவம், அழகியல் முக்கியத்துவம் என்பவற்றைக் கொண்டு யாழ்ப்பாணத்துச் சூழலில் பெரும்பாலும் இந்தக் கலைகள் பயிலப்படுவதில்லை எனத் தோன்றுகிறது.

இந்த நிலையில் அவை சமூக மேலாண்மை தமிழ் அடையாளம், வகுப்புசார் மேல் நோக்கிய அசைவியக்கம் என்பவற்றுடன் சம்பந்தப்படுத்தப்பட்டே புரிந்து கொள்ளப்பட முடியும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org